**கவனிக்க .-** (i) இவ்வாரம் வெளியாகும் வர்த்தமானியின் பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டிற்கான குருநாகல் மாவட்டத்தின் யூரிமார் பெயர்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது.
(ii) 2026.08.14 ஆந் திகதிய 2502 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2503 - 2026 අගෝස්තු මස 21 වැනි සිකුරාදා - 2026.08.21
2503 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2910 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2916 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2907 - B 82823 (2026/08)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவில் கடலோடிகளுக்கான வெற்றிடங்கள்

1. கடலோடிகளை ஆட்சேர்ப்பதற்கான இலங்கை நிரந்தர கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிற்கு பின்வரும் தகைமைகளையுடைய ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(அ) குடியுரிமை : இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வயது : 2026 புரட்டாசி மாதம் 15 ஆம் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 24 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) உயரம் : 5' 5'' (165.10 செ.மீ)

(ஈ) உடல் திணிவுச் சுட்டி : 17- 27

(உ) மார்பு : 32'' (81.28 செ.மீ).

(ஊ) பார்வை வர்ணப்பதிவு மட்டம் : STD II

(எ) தொலைநோக்குப் பார்வை : இடக்கண் 6/6 மற்றும் வலக்கண் 6/6 (மூக்குக் கண்ணாடிகள் மற்றும் கண்ணாடி வில்லைகள் பயன்படுத்தாமல்) (6/12 பார்வை வர்ணப்பதிவு மட்டம் மூக்குக் கண்ணாடிகள் மூலம் 6/6 வரை சரிசெய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளைக் கவனத்தில்கொள்ளலாம்.

(ஏ) குடியியல் நிலை : விண்ணப்பதாரிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். எந்தவொரு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவரும் பயிற்சிக் காலத்தின் போது திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

2. **வெற்றிடங்கள் (பிரிவுகள்) :**

(அ) ஜெனரல்சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் அல்லது இலங்கை கடற்படை தொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றால் வழங்கப்படும் மூன்று வருட முழு நேர தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்காக பின்வரும் பிரிவுகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

(1) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (கடல்சார் பொறியியல்)

(2) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா ( மோட்டார் வாகனப் பொறியியல்)

(3) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மின் பொறியியல்)

(4) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மின்னியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்)

(5) தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (கப்பலின் கட்டுமானப் பொறியியல்)

3. **கல்வித் தகைமைகள் :**

அ. க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் கணித பாடத்தில் திறமை சித்தியுடன் தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க.பொ.த. (உ/த) பரீட்சையில்

(1) பௌதீக விஞ்ஞானத் துறையில் தோற்றுதல் அல்லது

(2) உயிரியல் விஞ்ஞானத் துறையில் தோற்றுதல் அல்லது

(3) தொழில்நுட்பத் துறையின் கீழ் தொழில்நுட்பவியல் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4. மேற்படி பந்தி 1 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், பார்வை மற்றும் நிறை என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உயரம், பார்வை மற்றும் நிறை ஆகிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். சேவையில் சிறப்புத் திறமை மதிப்பொன்றைக் கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு விண்ணப்பதாரியும் இலங்கை கடற்படை தளபதியின் விருப்புரிமையினால் அவர் தேவையான உயரத்தைக் கொண்டிராவிடினும் கருத்திற்கொள்ளப்படுவார்.

5. **சேவை நிபந்தனைகள் :**

அ. விண்ணப்பதாரிகள் பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சிப் பாடநெறிகளுக்கு உட்படுத்தப்பட தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ஆ. பயிற்சிக் காலப்பகுதியின் போதும் மற்றும் பின்னரும், பயிலுநர்கள் கடற்படை சட்டத்திற்கு உட்பட்டவர்களாவர்.

இ. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவருக்கும் ஏனைய பொருட்களுடன் சீருடைகள் வழங்கப்படும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, பயிலுநர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு என்பன இலங்கை கடற்படையினால் வழங்கப்படும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியின் போது, பயிலுநர் ஒருவர் அவரின் விருப்பத்தின்பேரில் கடற்படையிலிருந்து விலகிச்செல்ல வேண்டி ஏற்பட்டால், அவரின் பயிற்சிக்காக இலங்கை அரசாங்கத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஊ. பயிற்சி காலப்பகுதியின் போது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பயிலுநர் ஒருவரின் தவறான நடத்தையின் காரணமாக அல்லது அவர் பொறுப்பாகவுள்ள ஏனைய ஏதேனும் காரணத்திற்காக, அவர் கடற்படைச் சேவைக்கு தகுதியற்றவர் என பொறுப்புடைய அதிகாரிகள் தீர்மானிப்பார்கள் எனின், அந்தச் சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட பயிலுநர் அதுவரை அவர் தனக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கை கடற்படைக்கு திருப்பிச் செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதிநிதியான கடற்படை தளபதியுடன் ஒரு பிணை ஒப்பந்தத்தில் ஈடுபடல் வேண்டும்.

எ. கடமைகளுக்காகவோ அல்லது பயிற்சிக்காகவோ, அனைத்து கடலோடிகளும் இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதிக்கு அல்லது வெளிநாட்டிற்கு இணைக்கப்படுவற்கு கடமைப்பட்டுள்ளனர்.

அரசகரும மொழித் தேவைப்பாடுகள் - தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தின் கீழ்வரும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவேயுள்ள மற்றும் சட்டமாக்கக்கூடிய அனைத்து கட்டளைகள் மற்றும் சட்டவாக்கத்திற்கும் கீழ்படிய வேண்டும்.

6. **சம்பளங்களும் படிகளும் :**

05/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கிணங்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க,

| | | |
|---|---|---|
| அ. | அடிப்படைச் சம்பளம் | – ரூபா 47,834.00 |
| ஆ. | வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | – ரூபா 17,800.00 |
| இ. | கஷ்டப் பிரதேசப்படி கொடுப்பனவு | – ரூபா 600.00 |
| ஈ. | சீருடை சுத்தம் செய்தல் கொடுப்பனவு | – ரூபா 350.0 |
| உ. | கஷ்டப் பிரதேசப்படி (தொழிற்பாட்டல்லாத பிரதேசங்களுக்காக) அடிப்படை பயிற்சிக்குப் பின் உரித்துடையது) வேறு கொடுப்பனவு | |
| | விசேட கொடுப்பனவு | – ரூபா 1000.00 |
| | விசேட மேலதிக கொடுப்பனவு | – ரூபா 2,400.00 |
| ஊ. | மொத்தச் சம்பளம் | – ரூபா 69,984.00 |
| எ. | உணவு கொடுப்பனவு உட்பட(சந்தர்ப்பத்திற்கு அமைய) | – ரூபா 29025.00 |
| ஏ. | மொத்தச் சம்பளம் தோராயமாக (உணவு கொடுப்பனவு உட்பட) | – ரூபா 99,009.00 |

ஐ. ஆண்டொன்றிற்கு மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும். (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு ஏற்புடையதாகும்.)

ஒ. முகாமில் வசிக்கும் கடலோடிகளுக்கு மாதமொரு தடவை படைவீரர்கள் தங்குமிடத்திலிருந்து அவர்களின் வீட்டிற்கு போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பேரூந்து கட்டணம் செலுத்தப்படும்.

ஓ. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும் (கடலோடி, மனைவி, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு ஏற்புடையதாகும்.)

ஔ. அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான கடலோடிகள் ரூ. 2,400.00 முதல் ரூ. 6,600.00 வரையான வீட்டு வாடகைக் கொடுப்பனவிற்கு உரித்துடையவர்களாவர்.

ஃ. திருமணமான கடலோடிகளுக்காக ஒதுக்கப் பட்டுள்ள குடிமனைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப திருமணமான கடலோடிகளுக்கு குடிமனைகள் வழங்கப்படும். அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்றவாறு வாடகை அறவிடப்படும்.

க. அடிப்படைப் பயிற்சிக்குப் பின்னர், வெளியே வசிக்கும் திருமணமான கடலோடிகளுக்கு ரூ. 29025.00 உணவு கொடுப்பனவாக வழங்கப்படும்.

7. **சலுகைகள்:**

கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவில் உள்ள கடற்படைவீரர்களுக்கு விசேட பதவி உயர்வு நடைமுறை பின்பற்றப்படுகிறது. இதற்கமைய, கடற்படை தொழில்வினைஞர்களுக்கு நிலவும் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொள்ளாத பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

8. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

அ. விண்ணப்பதாரி மாதிரி விண்ணப்பப்படிவத்திற் கிணங்க தெளிவான கையெழுத்தால் தன்னால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2026, ஆவணி மாதம் 15 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் தலைமை பணிப்பாளர் அதிகாரி (ஆட்சேர்ப்பு) இலங்கை கடற்படைத் தலைமையகம் பாதுகாப்பு தலைமையக வளாகம் த.பெ. இல. 593 பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்வினைஞர் கடலோடிகளின் ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு, www.navy.lk எனும் இணையதள முகவரிக்கு அல்லது 011-7195162, 011-7195155, 076-0275685 ஆகிய இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும், பிரவேசிக்கவும்.

ஆ. அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனங்களில்/ சபைகளில்/ குடியியல் தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தமது திணைக்களத்தின்/ கூட்டுத்தாபனங்களின்/ சபைகளின்/ குடியியல் தாபனங்களின் தலைமை அதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் விடு விக்கப்படுவார் என்ற சான்றிதழொன்றைக் கொண் டிருத்தல் வேண்டும்.

இ. பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் படும் போது அல்லது அவ்வாறு செய்ய வேண்டும் எனக் கூறப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. விண்ணப்பித்த பிரிவுக்குத் தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்ட சான்றிதழ்கள்;
3. பாடசாலை விடுகைச் சான்றிதழ்;
4. கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் (விண்ண-ப்ப முடிவுத் திகதியிலிருந்து 6 மாத காலத்திற்கு-ள் பெறப்பட்டது);
5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழிநுட்பப் பயிற்சி மற்றும்/அல்லது அனுபவச் சான்றிதழ்கள்(ஏதேனும் இருப்பின்) ;
6. அண்மையில் பெறபட்ட மூன்று நன்னடத்தை சான்றிதழ்கள். அதில் ஒன்று இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்தும். மற்றையது விண்ணப்பதாரியை இரண்டு வருடங்களுக்கு மேலாக தெரிந்த ஒருவரிடமிருந்து அல்லது தொழில் புரியும் நிருவனத்தில் இருந்து (தொழில் புரிபவராயின்) பெறப்பட்ட சான்றிதல் அவசியம்.
7. விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்.

ஈ. ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டப்படும் போது சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

உ. விண்ணப்பப்படிவத்துடன் ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் மூலப் பிரதிகள் இணைக்கப் படலாகாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் சான்றிதழ்களின் ஏதேனும் மூலப் பிரதிகள் காணாமற் போனால் இலங்கை கடற்படை அதற்குப் பொறுப்பாகாது.

9. தேர்வுக்கு முன்னர் அவருடைய விண்ணப்பப் படிவத்தில் உள்ள ஏதேனும் ஒரு கூற்று தவறானது எனக் கண்டறியப் பட்டால் விண்ணப்பதாரி தகைமை இன்மைக்கும் தேர்வுக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அவர் பதவி நீக்கத்திற்கும் உரித்தாக்கப்படுவார்.

10. **தெரிவு செய்தல்/நேர்முகப் பரீட்சைத் தேர்வுகள் முதலியவை :**

அ. மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரிகள் இலங்கை கடற் படையினால் பரிந்துரை செய்யப்பட்ட ஆரம்ப நிலை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் தேர்ச்சிபெற்ற விண்ணப்பதாரிகள் தேர்வுக் குழு ஒன்றின் முன்னிலையில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு தோற்ற வேண்டும். அவ்வாறு தேர்ச்சிபெற்ற விண்ணப்பதாரிகள் பின்வரும் உடற் தகைமை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

ஆ. உடற் தகைமைப் பரிசோதனையில் தேர்ச்சி பெறுவதற்கான தேவைப்பாடுகள்

| *உடற்பயிற்சி* | *நேரம் (நிமிடங்கள்/ செக்கன்கள்)* | *ஆண்* |
|---|---|---|
| 1600 மீ. ஓட்டம் | | 09 நிமிடங்கள் |
| Push Up | 01நிமிடம் | 12 அல்லது அதற்கு மேல் |
| Sit Up | 01நிமிடம் | 10 அல்லது அதற்கு மேல் |

இ. உடற்தகைமை பரிசோதனையில் சித்திபெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் கடற்படை மருத்துவ சபையின் முன் தோற்ற வேண்டும். தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இலங்கை கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவில் பயிலுனர் கடலோடிகளாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஈ. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையின் திகதி, நேரம் மற்றும் இடம் பற்றி வட்ஸ்அப் (WhatsApp) மூலம் அறிவிக்கப்படும். தபால் அல்லது வேறு எந்த வகையிலும் அறிவிக்கப்படமாட்டாது. இது தொடர்பான போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

உ. விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அவருடைய ஆளடையாள அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் மட்டுமே பரிந்துரை செய்தல் வேண்டும். ஏதேனும் வகையிலான ஆதரவளித்தல் அல்லது விண்ணப்பதாரி ஒருவரின் தெரிவில் செல்வாக்குச் செலுத்தல் என்பன அத்தகைய விண்ணப்பதாரியின் தகைமையின்மைக்கு வழிவகுக்கும்.

எ. ஆட்சேர்ப்புக்குத்தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

ஏ. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தொழில்முறைத் தகுதிகள் அவற்றின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக பரீட்சை திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றின் நம்பகத்தன்மை உறுதி செய்யப்படும்.

ஒ. அனைத்து விண்ணப்பதாரர்களின் பாதுகாப்பு இசைவுச் சான்றிதழ்கள் இலங்கை கடற்படைத் தலைமையகத்தால் மீள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படும்.

ஓ. இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதி, இலங்கை கடற்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்கின்ற செயன்முறையின் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தத்துவத்தைக்கொண்டிருப்பதுடன், தேசிய பாதுகாப்பு, இராணுவ மற்றும் இலங்கை கடற்படையின் நிர்வாகம்சார் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கேற்ப இலங்கை கடற்படைக் கட்டளைத்தளபதி மேற்படி தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற தற்றுணிவினைக்கொண்டிருப்பார்.

**குறிப்பு :** இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் தெளிவின்மை காணப்படும் போது சிங்கள மொழி மூலமான வாசகங்கள் மேலோங்கிக் காணப்படும்.

**கேடீசீ பெர்னாண்டோ,**
ஆர்எஸ்பி, யூஎஸ்பி, என்டீசீ, ஆர்சீடீஎஸ்
துணைக் கடற்படைத் தளபதி,
கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக வளாகம்,
த.பெ. இல. 593,
பத்தரமுல்லை.

**இலங்கை நிரந்தரக் கடற்படையில் தொழில்வினைஞர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. குடியுரிமை :..........................................................................................................................................

(இலங்கைப் பிரசையாவது பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா என்பதைக் குறிப்பிடுக மற்றும் பதிவு மூலமான பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும், திகதியையும் குறிப்பிடவும்)

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்): முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு) :..........................................................................................................................................

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................................................................

4. நிரந்தர முகவரி: ..........................................................................................................................................

5. தபால் முகவரி: ..........................................................................................................................................

6. பிறந்த திகதி: ..........................................................................................................................................

7. வயது : வருடங்கள் : ............... மாதங்கள் : .......... நாட்கள்: ......... (2026 ……… மாதம் …… ஆம் திகதிக்குள்)

8. உயரம்:............................., (அடி மற்றும் அங்குளங்கள்)

மார்பு :......................., (அங்குலங்கள்) நிறை :.......................,(கி.கி)

9. நிரந்தர முகவரிக்கு அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம் :..........................................................................................

10. மாவட்டம் :..........................................................................................................................................

11. தேர்தல் தொகுதி :..........................................................................................................................................

12. கிராம அலுவலர் பிரிவு :..........................................................................................................................................

13. தொலைபேசி இலக்கம் :..........................................................................................................................................

14. வட்ஸ்அப் இலக்கம்(WhatsApp) :..........................................................................................................................................

15. விவாகமானவரா/விவாகமாகாதவரா :..........................................................................................................................................

16. பால் :..........................................................................................................................................

17. கல்விகற்ற பாடசாலைகள் (ஒழுங்கு அடிப்படையில்) :..........................................................................................

18. கல்விகற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :..........................................................................

| *பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர்* | *தோற்றியுள்ள பரீட்சை* | *பரீட்சைக்கு தோற்றிய வருடம்* | *சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக)* |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த) :<br>க.பொ.த. (உ.த) :<br>வேறு : | | |

| *பாடசாலையின் பெயர்* | *க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றியபாடம்* | *பரீட்சைக்கு தோற்றிய வருடம்* |
|---|---|---|
| | பௌதீகவியல் பிரிவு<br>உயிரியல் பிரிவு<br>தொழில்நுட்பப்பிரிவு | |

20. பாடசாலை/ பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் :- (ஏற்புடையதாயின்)

| *தொழில்வழங்குநரின் பெயர் மற்றும் முகவரி* | *தொழிலின் தன்மை* | *சேவைக்காலம்* | |
|---|---|---|---|
| | | *இருந்து* | *வரை* |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள்

| *முழுப்பெயர்* | *பிறந்த இடம்* | *தொழில்* | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

22. இப் பதவி தொடர்பான ஏதேனும் விஷேட தகைமைகள் :

.................................................................................................................................................

23. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய குழுக்கள் மற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களை திகதிகள் / வருடங்கள் ஏனையவற்றுடன் பெற்றுக் கொண்ட தரநிலைகள்/மட்டங்களுடன் குறிப்பிடுக.)

.........................................................................................................................................................................

24. பாடசாலையில்/ பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஏனைய சாதனைகள் (திகதிகள்/ வருடங்கள் ஏனையவற்றுடன் விபரங்களைக் குறிப்பிடவும்)

25. ஆயுதந் தாங்கிய படை அல்லது தொண்டர் படை, பயிலிளவல் படையணி அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னைய ஏதேனும் சேவைகள்:

26. இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதந் தாங்கிய படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களையும் அத்தகைய விண்ணப்பங்களின் பெறுபேற்றினையும் குறிப்பிடுக.

27. இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை என்பவற்றில் நிரந்தர அல்லது தொண்டர் படையினராக ஏற்கனவே சேவைபுரிந்திருந்தால், தயவுசெய்து சேவைக்காலத்தையும், நீங்கள் வகித்த பதவியையும் குறிப்பிடுக.

28. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் தண்டிக்கப்பட்டு அல்லது பிணிக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக.

29. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரசாங்கத் துறை/ சபை/ கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கிகள், பல்கலைக்கழகங்கள், கூட்டு இருப்புக் கம்பனிகள் உள்ளடங்கலாக) ஆகியவற்றில் ஏலவே சேவையில் ஈடுபட்டிருப்பின், அத் தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்)

30. நன்நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| *பெயர்* | *பதவி* | *தபால் முகவரி* |
|---|---|---|
| | | |

30. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

மேற்குறித்த வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட பதில்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கை குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தொழில்வினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும், பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் வாசித்துப் புரிந்து கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ................................................ ……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

உங்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பதிவு அஞ்சல் மூலம் (குறித்த தொடர்புடைய ஆவணங்களின் நகல்களுடன்) முகவரிக்கு அனுப்பவும்.

தலைமை பணிப்பாளர் அதிகாரி (ஆட்சேர்ப்பு)
இலங்கை கடற்படைத் தலைமையகம்
பாதுகாப்பு தலைமையக வளாகம்
த.பெ. இல . 593
பத்தரமுல்லை

மேலதிக விபரங்களுக்கு : தொலைபேசி 011-7195155, 011-7195162 மொபைல் : 076-0275685

**08-220**

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

## களஅலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் பிரிவு-01 இன் (MN 06 - 2006 A) சேவை வகையைச் சேர்ந்த தரம் II இலுள்ள மனநல உத்தியோகத்தர்/ உளவியலாளர் (Psychologist) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் – 2026

1.0 சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு கள/அலுவலக உத்தியோகத்தர் பிரிவு 01 சேவை வகையின் (MN 06 - 2006 A) மனநல உத்தியோகத்தர் பதவியின் தரம் II இல் 07 பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

2.0 **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையின் பெறு பேறுகளின் அடிப்படையில், அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் உடல் தகுதி மற்றும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

3.0 நிலவுகின்ற வெற்றிடங்களின் கீழ் வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். எவையேனும் சில வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் முழுமையாக நிரப்புவதற்கும்/ நிரப்பாமல் இருப்பதற்கும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4.0 **மொழிமூலம் :**

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பும் ஏதேனுமொரு மொழியில் இப்பரீட் சைக்குத் தோற்ற முடியும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட மொழியை பின்னர் மாற்றுவதற்கான எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5.0. **இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**

5.1 **அடிப்படைத் தகுதிகள் :**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த குணநலன் உடையவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதியில் உள்ளவாறு தேவைப்படும் அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

5.2 **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து உளவியல் (Psychology) தொடர்பிலான விசேட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும், மேலும் உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் விஷேட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

5.3 **தொழில்சார்ந்த தகைமைகள்**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனம் ஒன்றில் மருத்துவ உளவியல் (Clinical Psychology) தொடர்பாக இரண்டு வருடகால பயிற்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

மனநல மருத்துவ /உளவியல் துறையில் விஷேட மருத்துவ அதிகாரி (Specialist Medical Officer in Psychology) ஒருவரின் மேற்பார்வையின் கீழ் ஆறு(06) மாதகால பயிற்சி ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.4 **உடல் தகுதிகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

6.0 **வயதெல்லை:**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதியில் உள்ளவாறு 21 வயதுக்குக் குறையாதவாறும் 35 வயதுக்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும்.

7.0 **சம்பள அளவு :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 எனும் இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை 1 இன் படி இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவு ரூ. 62,230-10x1190-11x1360 - 15x1670- 114,140 ஆகும்.

8.0 **எழுத்துப் பரீட்சை :**

| *வினாத்தாள்* | *பாடத் திட்டம்* | *நேர அளவு* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *சித்தி பெற வேண்டிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவு பரீட்சை | இந்த வினாத்தாள் விண்ணபதாரர்களின் வாய் மொழி, எண் மற்றும் இடஞ்சார்ந்த சூழல்களில் வழங் கப்படும் சிக்கல்களுக்கான அவர்களின் அனுமானம் மற்றும் பதில்களின் அடிப்படையில், சிக்கல்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கும், அவற்றை அளவிடுவதற்கும், நேரத்திற்கும் இடத்திற்கும் இடையிலான உறவுகளைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களின் திறனை மதிப்பிடும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. | 1 ½ மணித்தி யாலம் | 100 | 40% |

| *வினாத்தாள்* | *பாடத் திட்டம்* | *நேர அளவு* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *சித்தி பெற வேண்டிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|---|
| 2. விடயம் பற்றிய அறிவு | இந்த வினாத்தாள் மனநலம் மற்றும் உளவியல் சிகிச்சையினை (psychological Treatment) அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. | 03 மணித்தியாலம் | 100 | 40% |

9.0 **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

I. ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

II. இந் நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கும் தாங்கள் உட்பட்டவராக இருப்பீர்கள். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் அரசாங்கத்தினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படுவதன் பிரகாரம் அதற்குரிய பங்களிப்புத் தொகைகளை தாங்கள் இந்த நிதிக்கு செலுத்துதல் வேண்டும்

III. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 இன் படி நீங்கள் அரசகரும மொழியில் தொடர்புடைய தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

IV. இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

V. இந் நியமனம் பொது சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், MN-06-2006 A ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், மற்றும் திணைக்கள ரீதியிலான ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

1. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரியொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப் பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்களை A4 அளவு தாளில் தயாரித்து, முதல் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையிலும் 02 ஆம் பக்கத்தில் இலக்கம் 07 முதல் 09 வரையிலும் மீதமுள்ள தகவல்களை பின்வரும் பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்து அதனைத் தங்கள் சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

2. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது கருத்திற் கொள்ளப்படும் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகளை விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புவது கட்டாயமாகும்

3. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தேதி 2026.09.11 ஆகும். விண்ணப்பங்கள் பணிப்பாளர் (நிர்வாகம்) 07, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 106, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.09.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் “உளவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பம் (திறந்த)” என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்,

5. இது தொடர்பிலான மேலும் கடிதப் போக்குவரத்து நடவடிக்கைகள் மின்னஞ்சல் மூலமாகவும் மேற்கொள்ளப்படலாம். எனவே, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி ஒன்றினை வழங்குவது கட்டாயமாகும், மேலும் நீங்கள் அது தொடர்பில் விழிப்புடன் இருப்பதும் அவசியமானதாகும்.

6. பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இலங்கை வங்கியின் தப்ரோபேன் கிளையில் “சுகாதார செயலாளர்” எனும் பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 என்ற கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை இலங்கை வங்கியின் எந்தவொரு

கிளையிலும் செழுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் அதற்கென கொடுக்கப்பட்டுள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும் (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

7. விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ காவல்துறை சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் பதவியை வகிக்கும் அதிகாரி அல்லது அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் ஆண்டு திரட்டிய சம்பளம் ரூ. 854,880.00 க்கும் அதிகமாக சம்பளம் பெறும் அதிகாரி ஆகியோரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

8. ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண பொது சேவையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தங்களின் விண்ணப்பங்களை தாங்கள் பணியாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

9. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் பேரில், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். மேலும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அவர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

**11.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தில் அவர்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இது தொடர்பாக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை.
II. செல்லுபடியான கடவுச் சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை சரிபார்க்கும் வகையில் அவர்களது முகம் மற்றும் காதுகளை மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப் படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்கள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது தொடக்கம் பரீட்சை முடிந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மேற்பார்வையாளர்கள் பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் அவர்கள் முகத்தையும் காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் இருத்தல் வேண்டும்.

**12.0 போலியான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புக்கு பின்னர் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், அவ்விடத்தில் சிங்கள மொழியிலான வாசகமே செல்லுபடியாதல் வேண்டும்.

வைத்தியர் அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு – 10,
2026.08.02

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் மனநல உத்தியோகத்தர் /உளவியலாளர் (Psychologist) தரம் II பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2026**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : [ ] வதிவிட மாவட்டம் : [ ]

(சிங்களம் – S / தமிழ்- T / ஆங்கிலம் - E)

01. 1.1 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடனான பெயர்: Mr/Mrs/Miss ...................................................................

..........................................................................................................................................

(ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) உதா: Mr. SILVA A. B.

1.2 முழுப் பெயர் : ..........................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................................

1.3 முழுப் பெயர்: ..........................................................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................................................

02. 2.1 முகவரி (தனிப்பட்ட) : ..............................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................................

2.2 முகவரி (தனிப்பட்ட) : ..............................................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................................................

2.3 முகவரி (அலுவலக) : ..............................................................................................................

(ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................................

2.4 முகவரி (அலுவலக) : ..............................................................................................................

(சிங்களத்தில்/தமிழில் ..........................................................................................................

(முகவரியில் மாற்றங்கள் ஏற்படின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்)

2.5 தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) : ..........................................................................................

2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) : ..........................................................................................

2.7 மின்னஞ்சல் முகவரி (email address) : ..........................................................................................

03. 3.1 பிறந்த திகதி: ஆண்டு: [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி: [ ][ ]

3.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள்: [ ][ ][ ][ ] மாதங்கள்: [ ][ ] நாட்கள்: [ ][ ]

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................

05. பால் (ஆண்/ பெண் பிரிவு : ..........................................................................................

06. தகைமைகள் :

6.1 உரிய கல்வித் தகைமைகள் :

..........................................................................................................................................

6.2 தொழில்சார் தகைமைகள் : ..........................................................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விபரங்கள் :

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : …………………………………………………………………………

7.2 பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : …………………………………………………………………………

7.3 செலுத்திய தொகை : …………………………………………………………………………

| இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1000.00 தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழராத வண்ணம் இங்கு ஒட்டவும் |
|---|

08. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய அனைத்து தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், அனைத்து பகுதிகளும் முறையாக நிரப்பப்பட்டுள்ளன என்றும் கௌரவமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் விண்ணப்பம் இரத்து செய்யப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் இதன்மூலம் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி : …………………………… ………………………………………………

விண்ணப்பதாரரின் கையொப்பம்

09. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி …………………………………………………… என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் ……………………… ஆம் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டுள்ளார் என்றும் இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………………………

சான்றளிப்பவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம்
உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

முழுப் பெயர் : ……………………………………………………………………………
பதவி : ……………………………………………………………………………
முகவரி : ……………………………………………………………………………

10. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்துதல் : (அரசாங்க சேவை அல்லது மாகாண பொது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்).

இவ் விண்ணப்பதாரர் திரு./திருமதி/ செல்வி. ……………………………………………………………………………
இந்த திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் ……………………………………………… ஆந் திகதி முதல் சேவையாற்றி வருகின்றார். அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால், தற்போது வகிக்கும் பதவியில் இருந்து அவர் விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்பட மாட்டார் எனவும், …………………… ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………………………………………

திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஒப்பம்

பெயர் : ……………………………………………………………………………
பதவிப் பெயர் : ……………………………………………………………………………
திகதி : ……………………………………………………………………………
திணைக்களம்/ நிறுவனம் : ……………………………………………………………………
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்).

08-218

## இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவையில் (நிரந்தர பாதை, பாலங்கள்,கட்டிடங்கள், தொழிற்சாலைகள், இயக்கத்தளங்கள், சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு) III ஆம் தரத்தின் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2026

இலங்கை புகையிரத திணைக்களத்தில் மேற்பார்வை முகாமையாளர் சேவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் அவ் அவ் பதவிகளுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2026.09.21 ஆம் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 30 வயதினை விஞ்சாத இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவிப் பெயர்* | *தரம்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| மேற்பார்வை முகாமையாளர்(நிரந்தர பாதை) | III ஆம் தரம் | 25 |
| மேற்பார்வை முகாமையாளர்(பாலங்கள்) | III ஆம் தரம் | 03 |
| மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடங்கள்) | III ஆம் தரம் | 07 |
| மேற்பார்வை முகாமையாளர் (தொழிற்சாலைகள்) | III ஆம் தரம் | 13 |
| மேற்பார்வை முகாமையாளர் (இயக்கத்தளங்கள்) | III ஆம் தரம் | 15 |
| மேற்பார்வை முகாமையாளர் (சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு) | III ஆம் தரம் | 20 |

02. விண்ணப்பத்தினை பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2026.09.21 ஆகும். அனைத்து விண்ணப்பங்களும் அத் திகதிக்கு முன்னதாக புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகம், நியமனக்கிளை, த.பெ.இல. 355, ஓல்கொர்ட் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். எந்தவொரு விண்ணப்பமும் தனிநபரின் பெயரிற்கு அனுப்பி வைக்கவோ அல்லது கையில்கொண்டு வந்து பாரமளிக்கவோபடக் கூடாது. பூரணமற்ற,முறையற்ற,தேவையான தகைமைகளை நிறைவு செய்யாத,முறையாக பணம் செலுத்தப்படாத மற்றும் தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமுன்றி நிராகரிக்கப்படும். அரசாங்க அல்லது உள்ளூராட்சி சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பத்தினை அவ் அவ் நிறுவன தலைவர்களின் ஊடாக குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். இப் பதவிக்கான எழுத்து மூல பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் மூலம் நடைபெறும்.

03. புகையிரத திணைக்களத்தின் சேவை அவசியத்தின் பொருட்டு காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையில், தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் மேலே காட்டப்பட்டுள்ள ஒரு பதவியில் நியமிக்கப்படுவதோடு நியமிக்கப்பட்டதன் பின்னர் பதவிகளுக்கிடையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

04. **பதவியின் கடப்பாடுகள் :**

**மேற்பார்வை முகாமையாளர்(நிரந்தர பாதை) :**

புகையிரத இயக்கத்திற்கு பொருத்தமான முறையில் புகையிரத பாதை அமைப்பினை புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல், பராமரித்தல் மற்றும் நடாத்திச் செல்லல் போன்றவற்றில் மேற்பார்வையாளரின் கடப்பாடுகளை மேற்கொள்ளல்.

**மேற்பார்வை முகாமையாளர்(பாலங்கள்) :**

புகையிரத இயக்கத்திற்கு பொருத்தமான முறையில் புகையிரத பால அமைப்பினை புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல், பராமரித்தல் மற்றும் நடாத்திச் செல்லல் போன்றவற்றில் மேற்பார்வையாளரின் கடப்பாடுகளை மேற்கொள்ளல்.

**மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடங்கள்) :**

கட்டிடங்கள் மற்றும் வியூகங்களை புதிதாக நிர்மாணித்தல், பழுதுபார்புக்களை மேற்கொள்ளல் மற்றும் நடாத்திச் செல்லல் போன்றவற்றில் மேற்பார்வையாளரின் கடப்பாடுகளை மேற்கொள்ளல்.

**மேற்பார்வை முகாமையாளர் (இயக்கத்தளங்கள்) :**

புகையிரத என்ஜின் மற்றும் இயக்கப்பெட்டி மற்றும் பயணிகள் பெட்டிகளில் இடம் பெறும் தொழில்நுட்ப குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் அப் பெட்டிகளை சேவையில் ஈடுபடுத்த முன்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்தி பரீட்சித்து உறுதிபடுத்துதல் அக் காரியங்களுக்கு ஏற்புடைய இயந்திரோபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் என்பவற்றை சேகரித்து வைத்துள்ள களஞ்சியங்களை நடாத்திச் செல்லல்,தொழிற்சலைகளுக்குரிய இயந்திரோபகரணங்களை பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளில் மேற்பார்வையாளரின் அனைத்து கடப்பாடுகளையும் மேற்கொள்ளல்.

**மேற்பார்வை முகாமையாளர் (தொழிற்சாலைகள்) :**

புகையிரத இயக்கத்திற்கு பொருத்தமான முறையில் என்ஜின்கள், பெட்டிகள், பயணிகள் பெட்டிகள் உள்ளடங்கலாக ஏனைய இயந்திரோபகரணங்களை பழுதுபார்த்தல், பராமரித்தல் ஏற்புடையவாறு உதிரி பாகங்களை புதிதாக உற்பத்தி செய்தல் மற்றும் பழுதுபார்ப்புக்களின் பின்னர் அப்புகையிரத என்ஜின் பெட்டிகளை ஓட்டத்தில் ஈடுபடுத்தி பரீட்சித்து உறுதிப் படுத்துதல் அக்காரியங்களுக்கு ஏற்புடைய இயந்தி ரோபகரணங்கள், உதிரிபாகங்கள் என்பவை சேகரிக் கப்பட்டுள்ள களஞ்சியங்களை நடாத்திச் செல்லல், தொழிற்சாலைக்கு ஏற்புடைய இயந்திரோபகரணங் களை பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளில் மேற் பார்வையாளரின் அனைத்து கடப்பாடுகளையும் மேற்கொள்ளல்.

**மேற்பார்வை முகாமையாளர் (சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு ) :**

புகையிரத இயக்கத்திற்கு பொருத்தமான முறையில் சமிக்ஞை அமைப்பினை மற்றும் தொலைதொடர்பு முறைமையினை புதிதாக நிர்மாணித்தல், பழுது பார்த்தல்களை மேற்கொள்ளல், பராமரித்தல் மற்றும் நடாத்திச் செல்லல் போன்றவற்றில் மேற்பார்வை யாளரின் கடப்பாடுகளை மேற்கொள்ளல்.

05. **சம்பள அளவுத்திட்டம்.**

I. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இற்கு அமைய, ரூ. 57,810 - 5 x 890 - 5 x 1030 - 10 x 1300 - 10 x 1340 - ரூ. 93,810.00 ஆகுமென்ப தோடு, ரூ. 57,810.00 எனும் ஆரம்ப சம்பள படிமுறையில் வைத்துக் கொடுப்பனவு செய்யப் படும்.

II. இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு ஆரம்ப சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான உரித்தும் காணப் படுகிறது..

III. நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட நேரும் சந்தர்ப்பத்தில் “அக்ரஹார“ காப்புறுதியின் கீழ், செலவிட்ட நிதியை மீள நிரப்பிக்கொள்ள முடியும்.

IV. சேவை தேவைப்பாட்டிற்கமைய உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக் கொள்வதற்கான உரித் துடைமையும் காணப்படுகின்றது.

06. (அ) **கல்விசார் தகைமைகள் :**

(i) சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறேதேனும் ஒரு பாடத் திற்கு திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியெய் தியிருத்தல்

மற்றும்

(ii) பிரயோக கணிதம், தூய கணிதம், இரசாயன வியல், பௌதீகவியல், இணைந்த கணிதம் போன்ற பாடங்களுள் இரண்டு பாடங்கள் உட்பட விஞ்ஞான/கணித பாடப்பரப்பிற் குரிய மூன்று பாடங்களில் கபொ.த.(உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைதல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள் :**

(I) மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிநுட்ப டிப்ளோமா

அல்லது

(II) தேசிய பயிலுநர்கள் மற்றும் தொழிநுட்ப பயிற்றுவிப்பு அதிகார சபையினால் வழங்கப் படுகின்ற பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா

அல்லது

(III) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா

அல்லது

(IV) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பவியல் டிப்ளோமா

அல்லது

(V) மூன்றாவது மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பதவிக்கு ஏற்புடைய துறைசார் தேசிய தொழில்சார் திறமை(NVQ) 06 மட்டத்தில் பாடநெறியினை தொடர்ந்து சான்றிதழை பெற்றிருத்தல்

(ஏற்புடைய துறைகள் கீழ்வருமாறு அமைய வேண்டும்)

I. மேற்பார்வை முகாமையாளர் (நிரந்தர பாதை)/மேற்பார்வை முகாமையாளர் (கட்டிடங்கள்)/மேற்பார்வை முகாமை யாளர் (பாலங்கள்) - சிவில் பாடத்துறை யினுள் ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. மேற்பார்வை முகாமையாளர் (தொழிற் சாலை)/மேற்பார்வை முகாமையாளர் (இயக்கத்தளம்) - இயந்திர/மின்னியல் மற்றும் இலத்திரனியல் பாடத்துறையினுள் ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய் திருத்தல் வேண்டும்.

III. மேற்பார்வை முகாமையாளர் (சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு) மின்னியல் மற்றும் இலத்திரனியல் மற்றும் மின்னியல் தொலைத்தொடர்பு பாடத்துறையினுள் ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய் திருத்தல் வேண்டும்.

(இ) **வேறு தகைமைகள்** :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

II. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தையை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரி குறித்த அனைத்து தகைமைகளை மற்றும் குறித்த வயது எல்லையை விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அனைத்து வகையிலும் நிறைவு செய்திருந்தால் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகைமை களை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்படுவார்.

07. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை :**

i. மேற்கூறிய (06) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை எழுத்து மூல பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப் படையில் சாதாரண நேர்முக தேர்விற்கு உட்படுத்தி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.மேலே முதலாவது பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப் படுவதோடு காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

ii. பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்ட பத்தினுள் தாம் தோற்றும் அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை நிலையாதிபதி திருப்தி யடையும் வகையில் ஆளடையாளத்தை உறுதிப் படுத்த வேண்டும். அதற்காக கீழ்வரும் ஏதேனு மொரு ஆவணத்தை முன்வைக்க முடியும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் மின்னணு தொலைத்தொடர்பு கருவிகள் அணியாமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக காதுகள் இரண்டையும் மூடாத வண்ணம் பரீட்சை மண்ட பத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த கணம் தொடக்கம் பரீட்சை முடிந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரிகளை இனங்கண்டுகொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாத வண்ணம் இருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை நுழைவுச் சீட்டினை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்கு அல்லது பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

08. **தெரிவு செய்யும் முறைமை :**

எழுத்து மூல பரீட்சையில் 40% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேலதிகமாக பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தி பெற்றவர்களாக கருதப்படுவர். அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய் துள்ளவர்கள் புள்ளிகளை பெற்றுக் கொண்ட முறைமைக் கமைய தொகுக்கப்பட்டு வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கைக்கு பொது நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தெரிவு செய்யப்படுவர்,

09. இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவையில் (நிரந்தர பாதை, பாலம், கட்டிடங்கள், தொழிற்சாலை, இயக்கத் தளம், சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு) III ஆம் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த எழுத்து மூல பரீட்சை தொடர்பான விபரம்.

(I) பரீட்சை முறைமை மற்றும் பரீட்சை விதப் புரைகள்

இந்தப் பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங் களை கொண்டமைந்துள்ளது.

1. நுண்ணறிவுப் பரீட்சை
2. விடய தொடர்பிலான தொழில்நுட்ப பரீட்சை

(II) பரீட்சை முறைமை

1. நுண்ணறிவுப் பரீட்சை : காலம் 01 மணித்தி யாலயம் 100 புள்ளிகள்

2. விடயம் தொடர்பிலான தொழில்நுட்ப பரீட்சை : காலம் 03 மணித்தியாலங்கள் 100 புள்ளிகள்

(எழுத்து மூல வினாப்பத்திரம் தொடர்பில் சித்தியடையும் புள்ளிகள் 40% ஆகும்.)

a. **பாட விதப்புரை**

**பாட இலக்கம் 01 – நுண்ணறிவுப் பரீட்சை**

விண்ணப்பதாரியின் வாத திறமை மற்றும் விபரிப்பு ஆளுமை மற்றும் சரியான நிகழ் வினை அனுமானிப்பதற்கான திறமை, பொது அறிவு மற்றும் நுண்ணறிவு பற்றிய அளவீடுகளை மேற்கொள்வதினை நோக்க மாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இது கணித பிரச்சினைகள், பொது அறிவு, சுற்றாடல் மற்றும் அதனை தழுவிய பல்வினா வினாப்பத்திரமாகும்.

**பாட இலக்கம் 02 – விடயம் தொடர்பிலான தொழில்நுட்ப பரீட்சை**

ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகளாக குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் டிப்ளோமா சான்றிதழ் அல்லது அதற்கு சமமான சான்றிதழை கொண்டவரிடம் காணப்படக் கூடிய தொழில்நுட்ப அறிவு மட்டம் மற்றும் நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு துறையில் பாவிக்கப்படும் நவீன பொறி முறைகளின் செயற்பாடு பற்றிய அறிவு என்பவற்றை பரீட்சிக்கும் முறையில் வினாக்கள் உள்ளடக் கப்படும்.

b. **பரீட்சை அமைப்பு – பரீட்சை மொழி மூலம்**

(அ) இப் பரீட்சை சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விரும்புகின்ற ஏதேனும் ஒரு மொழியில் பரீட்சைக்கு தோற்றலாம்.

குறிப்பு :

(1) விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையில் அனைத்து பரீட்சைத் தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே தோற்ற வேண்டும்.

(2) விண்ணப்பதாரியொருவரின் சுய விண் ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(3) அனைத்து விண்ணப்பதாரிகளும் இரண்டு (02) வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.

(4) ஒரு தடவையில் ஆட்சேர்ப்பு செய்யப் படும் எண்ணிக்கை புகையிரத பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும்.

10. **விண்ணப்பத்தினை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் :**

(I) விண்ணப்பமானது A4 (தட்டச்சு செய்யும் தாள்)அளவிலான தாளின் இரு புறங்களையும் பாவனைக்கு உட்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும்.

(விண்ணப்பத்தினை தங்களது கையெழுத்திலேயே பூரணப்படுத்த வேண்டும்.)

விண்ணப்பத்தில்-

1 ஆவது பக்கத்தில் 01 தொடக்கம் 06 வரையான விடயங்களும்

2 ஆவது பக்கத்தில் 07 தொடக்கம் 12 வரையான விடயங்களும்

3 ஆவது பக்கத்தில் கையொப்பத்தினை உறுதிப் படுத்தல் மற்றும் திணைக்கள/நிறுவன தலைவரின் உறுதிப்படுத்தல்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள், பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும்.விண்ணப்பத்தின் நகற் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப மானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரியினால் பரிசீலித்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு காணப்படாதவிடத்து விண்ணப்பமானது நிராகரிக் கப்படும். விண்ணப்பத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தி யாவசியமாகும்.

(II) பரீட்சைக் கட்டணம் ரூ. 1200.00 ஆகும். அது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் புகையிரத பொது முகாமையாளரது கணக்கு இல 176-1001-2-9027313 எனும் கணக்கிற்கு வரவு வைத்து வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஏற்புடைய விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். இப் பற்றுச்சீட்டின் நகலினை முன்வைத்தல் அல்லது வேறு முறைகளில் பணத்தினை செலுத்துதல் என்பன விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களாக அமை யும். மேலும் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நகற் பிரதி யினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும். தகைமைளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட கட்டணங்கள் எக்காரணத்தினை முன்னிட்டும் திருப்பிச் செலுத்தப் பட மாட்டாது.

(III) விண்ணப்பத்தினை இட்டு அனுப்பும் உறையின் இடது மேல் பக்க மூலையில் “இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமை யாளர் சேவையின் பதவிக்கான ஆட்சேர்ப்பு -2026” எனக் குறிப்பிடவும்.

(IV) வெளிவாரியான விண்ணப்பதாரிகளின் விண்ணப் பங்களில் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப் பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். யாதா யினும் நிறுவனத்தினால் இவ் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முக பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரியாயின் தமது

கையொப்பத்தினை நிறுவன தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கொண்டும் அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரியொருவர் தமது கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர், பிரிவின் கிராம உத்தியோகத்தரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர், முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்தரொருவர், ரூ. 240,360.00 இனை விஞ்சிய வருடாந்த திரண்ட சம்பளத்தினை பெறுகின்ற அரசாங்க மற்றும் உள்ளூராட்சி சேவையில் உள்ள நிரந்தர பதவியினையுடைய பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(V) தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கும் நபர்களின் கையொப்பம் தமது கிட்டிய தலைவலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவர்களது விண்ணப்பங்கள் ஏற்புடைய நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பிவைத்தல் கட்டாயமாகும்.

(VI) விண்ணப்பக்கோரல் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குள் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த தகைமைகளை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டினை முன்வைத்து பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் ஏற்புடையதாகுமெனில் மாத்திரம் திணைக்கள தலைவரின் உறுதிப்படுத்துதலுடன் முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை முன் வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு தகைமைகளை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை தொடர்பில் பரீட்சை நுழைவுச்சீட்டினை வழங்குதல் தகைமைகளை கொண்டிருப்பதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரி தகைமைளை மதிப்பீட்டு நேர்முக பரீட்சைக்கு அழைப்பித்து வர்த்தமானிக்கமைய தகைமைகள் காணப்படுகிறதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இன்றி காணப்படுகின்றமை தெரியவருமிடத்து அவர்களது பரீட்சை எதிபார்க்கை இரத்துச் செய்யப்படும்.

11. **சேவை நிபந்தனைகள் :**

புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவையில் III தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் உரிய சம்பள அளவு திட்டத்தின் ஆரம்ப சம்பள படிமுறையில் வைக்கப்படுவர்.

12. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்:**

I. இப்பதவி நிரந்தரமானதாகும். அரசினால் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் ஓய்வூதியம் தொடர்பிலான கொள்கைகளுக்கான தீர்மானத்திற்கு கீழ் பணிய வேண்டும். ஏற்கனவே விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவிற்கு பங்களிப்பு செய்பவர் எனின் தொடர்ந்தும் அதற்கு பங்களிப்பு நிதியினை செலுத்த வேண்டும்.

II. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இன் ஏற்பாடு களுக்கமைய அரசாங்க சேவைக்கு இணைந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக ஏனைய அரசமொழி தொடர்பில் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்

III. தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தாபனக்கோவையில் மற்றும் நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட நடைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமையவும் கீழ் படிந்து சேவை செய்ய வேண்டும். அவ்வாறே காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், திணைக்கள அறிவுறுத்தல்களுக்கு கீழ் படிந்து சேவையாற்ற பொருந்தியுள்ளீர்.

IV. ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் திணைக்களத்தின் ஊடாக ஏற்புடைய துறைசார் பயிற்சி வழங்கப்படுவதுடன் அதன்பிறகு 10 வருட சேவைக் காலம் தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தை மீறும் பட்சத்தில் ரூ.1,000,000.00 பணத்தொகையினை திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு விண்ணப்பதாரி பொருந்தியிருத்தல் வேண்டும்.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தினை மேற்கொள்ளும் அதிகாரம் புகையிரத பொதுமுகாமையாளருக்கு உள்ளது. புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவையின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளும் இவ் அறிவித்தலுக்கு ஏற்புடையதாகும்.

14. இவ் அறிவித்தலானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுவதோடு யாதேனுமொரு பொருத்தப்பாடற்ற அல்லது இணங்காத தன்மை காணப்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக் கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**ரவிந்திர பத்மபிரிய,**
புகையிரத பொதுமுகாமையாளர்.

இலங்கை புகையிரத திணைக்களம்,
இல 355, ஒல்கோர்ட் மாவத்தை,
கொழும்பு 10,
2026, ஓகத்து 11.

(இதற்கமைய தாளின் இருபுறத்தினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பூரணப்படுத்துவதற்கு முன்னர் விண்ணப்பம் கோரல் அறிவித்தலினை வாசித்து நன்றாக விளங்கிக் கொள்ளல் வேண்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமையாளர் சேவையில் (நிரந்தர பாதை, பாலம்,கட்டிடங்கள், தொழிற்சாலை, இயக்கத்தளம், சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு) III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பிலான போட்டிப் பரீட்சை - 2026**

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : ☐

சிங்களம் 2
தமிழ் 3
ஆங்கிலம் 4

கோருகின்ற பதவி : ..............................................

(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

01. முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :
   (1) சிங்களத்தில்/தமிழில் : ..........................................................................................................................
   (2) ஆங்கிலத்தில் : ..........................................................................................................................
   (உதாரணம் PERERA, R.M.D)
02. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :
   (1) சிங்களத்தில்/தமிழில் : ..........................................................................................................................
   (2) ஆங்கிலத்தில் : ..........................................................................................................................
03. நிரந்தர முகவரி :
   (1) சிங்களத்தில்/தமிழில் : ..........................................................................................................................
   (2) ஆங்கிலத்தில் : ..........................................................................................................................
04. பெண்/ஆண் (பால்) :
   ஆண் 1, பெண் 2 ☐
   (குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)
05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
06. இனம்
   சிங்களவர்-1/இலங்கை தமிழர் - 2/ இந்திய தமிழர் - 3 / முஸ்லிம்கள் - 4 / பறங்கியர் - 5/மலே இனத்தவர் - 6 ☐
   (குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)
07. வதிவிடம்
   (1) கிராம அலுவலர் பிரிவு : ................................... அதன் இலக்கம் : ..........................................
   (2) பிரதேச செயலாளர் பிரிவு : ................................................................
   (3) மாவட்டம் : ................................................................
08. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐
09. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐
10. 2024.12.31 ஆந் திகதிக்கு வயது: வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐
11. கல்விசார் தகைமைகள் :
   (1) கபொ.த.(சா/த)
   பரீட்சை சுட்டெண் :............................ ஆண்டு :..............................

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(2) (11) கபொ.த.(உ/த)

பரீட்சை சுட்டெண் :........................... ஆண்டு :...........................

| *தொடரிலக்கம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(111) தொழில்சார் தகைமைகள்

12. நீங்கள் எச்சந்தர்ப்பத்திலேனும் அல்லது ஏதேனும் ஓர் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த கூட்டினுள் X அடையாளத்தை இடுக)

13. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்**

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை அறியத்தருகின்றேன். இதில் ஏதேனும் பகுதியினை பூர்த்தி செய்யாதிருத்தல், தவறாக மற்றும் பொய்யாக பூர்த்தி செய்திருத்தல் போன்ற காரணங்களினால் என்னுடைய விண்ணப்பம் நிராகரிப்பு செய்யப்படுவதற்கான காரணங்களாக அமையும் என்பதை நன்கு அறிவேன். அதனால் ஏற்படும் நட்டத்தினை நான் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்கிறேன்.

(ஆ) மேற்கூறிய (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவை என நான் பதவியில் நியமிக்கப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இணங்குவேன் என்பதையும் அறியத்தருகின்றேன். அதனால் ஏற்படும் நட்டங்கள் ஏதும் இருப்பின் அவற்றை நான் தனிப்பட்ட ரீதியில் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(இ) மக்கள் வங்கியில் ரூ.1,200.00 ஐ செலுத்தி பெற்றுக் கொண்ட இலக்கத்தினையுடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பற்றுச்சீட்டை கழறாத வண்ணம் அதன் ஓர் ஓரத்தில் ஒட்டவும் பற்றுச்சீட்டின் (பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்ளவும்)

(ஈ) இப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட இணங்குகின்றேன்.

(உ) மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்படிவதை இத்தால் அறியத் தருகின்றேன்.

(ஊ) மேலும் நேர்முகப் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்படிவதை இத்தால் அறியத் தருகின்றேன்.

............................................................

திகதி :........................... விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள, தேசிய அடையாள அட்டை ................................ இலக்கத்தினையுடைய திரு./திருமதி .............................................அவர்களை, தனிப்பட்ட ரீதியில் நான் அறிவேன் என்றும் அவர் இன்றைய தினம் என் முன்னால் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..........................................................................................

பதவி : ........................ .....................................................................

முகவரி : ..........................................................................................

திகதி : ..........................................................................

15. திணைக்கள /நிறுவன தலைவரின் உறுதிப்படுத்தல்
இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள திரு. ....................................................... அவர்கள், ....................................... .................... திணைக்களத்தில்/நிறுவனத்தில்....................................ஆம் திகதி முதல் ................................... வரை .......................................... ஆக சேவை செய்துள்ளார். அவருக்கு எதிராக முடிவுறாத ஒழுக்காற்று நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டுள்ளது/அறிக்கையிடப்படவில்லை. அவரது வேலை, நடத்தை மற்றும் வரவு மகிச்சிகரமானது/ மகிழ்ச்சிகரமற்றது. குறித்த பரீட்சை கட்டணத்தை செலுத்தியிருப்பதையும் அப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டிருப்பதையும், அவர் புகையிரத திணைக்களத்தில் மேற்பார்வை முகாமையாளர் சேவையில் பதவியொன்றிற்கு தெரிவு செய்யப்படுமிடத்து இத் திணைக்களத்திலிருந்து /நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதை அறியத் தருகின்றேன்.

திணைக்கள / நிறுவனப் தலைவரின் கையொப்பம்

திகதி
உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர்
பதவி
முகவரி
(தயவு செய்து உத்தியோகபூர்வ இலட்சினையை பொறிக்கவும்)

08-243

---

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் சாராத பல்நோக்குப் பிரிவு 01 சேவை வகுதிக்குரிய சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு (திறந்த) – 2026

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் கடன் இணக்க சபைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் சிங்கள மொழி மூல சுருக்கெழுத்தாளர் பதவிகள் 03 இற்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழே குறிப்பிடப்பட்டு உள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் “செயலாளர், கடன் இணக்க சபைத் திணைக்களம், இல. 46, 48 கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை,கொழும்பு 08“ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் சாராத பல்நோக்குப் பிரிவு 01 சேவை வகுதிக்குரிய சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு (திறந்த) - 2026 எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.09.21 ஆம் திகதி ஆகும்.

குறிப்பு : விண்ணப்பம் ஒன்றோ அல்லது அது தொடர்பான கடிதம் ஒன்றோ தபாலில் தொலைந்து போனமை தொடர்பாகவோ அல்லது தாமதமாகியமை தொடர்பாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

01. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

I. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. (ஓய்வூதிய உரித்துடையது என்பது தொடர்பில் அரசு எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைய மாற்றமடையும்.)

II. இந்தப் பதவிக்காக நியமனம் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் 03 வருட தகுதிகாண் காலம் ஒன்றிற்கு உட்படுவதுடன், மேற்படி 03 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

III. நியமன திகதி முதல் 05 வருட காலப்பகுதிக்குள் அரசாங்க நிருவாக சுற்றுநிருப இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றுநிருபங்கள் என்பவற்றிற்கு ஏற்ப உரிய மட்டத்திலான மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அரச கரும மொழியல்லாத வேறு மொழி மூலம் ஒன்றினூடாக சேவைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் 03 வருட காலப்பகுதிக்குள் ஒரு அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், மற்றைய மொழி தொடர்பான தேர்ச்சியினை 05 வருட காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள்,இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை,

அரச நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திணைக்களம் சார் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு இந்த நியமனம் கட்டுப்படும்.

02. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் - III**

03. **சம்பள அளவுத்திட்டம் -**

2025.03.25 ஆம் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் அட்டவணை II இற்கு அமைய இந்த நியமனத்திற்கு உரித்தான மாதாந்த சம்பளத் திட்டம் (MN 02-2025) ரூ. 48,470 – 10 x 540 - 11 x 630 - 10 x 010 - 10 x 1,190 – ரூபா 82,800.00 ஆகும் என்பதுடன் மேற்படி சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆம் திகதி முதல் ஆகும். நியமனம் அமுலாகும் திகதி முதல் இந்தச் சுற்றுநிருபத்தின் அட்டவணை III இன் ஏற்பாடுகளுக்கு அமைய தங்களுக்கு சம்பளம் செலுத்தப்படும்.

04. **தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள் :**

(அ) சிங்களம்/ தமிழ் /ஆங்கில மொழி உட்பட நான்கு (04) திறமைச் சித்திகளுடன் கணித பாடம் உட்பட ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட் சையில் சகல பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாடப் பரப்பின் கீழ் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் போது மானது.)

II. **தொழிற் தகைமைகள் :**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, தொழிநுட்பக் கல்லூரி, அரச பதிவு செய்யப் பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்து தொடர்பாக 06 மாதங்களுக்குக் குறையாத பாடநெறி ஒன்றினைக் கற்றிருத்தல்.

அல்லது

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பாடத்தில் திறமைச் சித்தி ஒன்றினைப் பெற் றிருத்தல்.

அல்லது

தொழிநுட்பக் கல்லூரிகளில் செயலாளர் பரிச்சயப் பாடநெறியினைக் கற்று நீதிமன்றம் சாராத உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனத்தில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து தொடர்பில் மேலும் 06 மாத கால பாடநெறி ஒன்றினைக் கற்று மேற்படி பாடநெறிக்கு அமைய நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் அமைச்சில் அல்லது நீதிமன்றம் ஒன்றில் ஆறு (06) மாதகால செயன்முறைப் பயிற்சி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

III. அனுபவம் :

விசேட தகைமை ஒன்றாகக் கருதப்படும்.

05. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தன்று வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

06. **உடற் தகைமைகள் :**

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்று வதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

07. **ஏனைய தகைமைகள் :**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

III. பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப் படும் இறுதித் தினத்தன்று சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமைகளை உறுதிப் படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து முன் வைத்தல் வேண்டும்.

08. **ஆட்சேர்ப்பு முறை :**

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினைக் கோரும் மொழி மூலத்திலேயே தொழிற்கல்வி மற்றும் தகைமை யினை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை என்பவற்றிற்குத் தோற்றுதல் வேண்டும்.

08.1 **தொழில் சார் பரீட்சை** :

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் ஒப்படைக்கப்படும் நிறுவனம் ஒன்றின் ஊடாக நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சை ஒன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

தொழில் சார் பரீட்சை தொடர்பான விபரங்கள் :

| | *விடயத் துறை* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | சுருக்கெழுத்து (சிங்களம்) | 45 நிமிடங்கள் | 100 | 40% |
| 02 | தட்டெழுத்து (சிங்களம்) | 20 நிமிடங்கள் | 100 | 40% |

பரீட்சைக்கான பிரதான பாடப்பரப்பு :

| | *விடயத் துறை* | *பாடப் பரப்பு* |
|---|---|---|
| 03 | சுருக்கெழுத்து ( சிங்களம் ) | 05 நிமிடங்களுக்குள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தி ஒன்றினை நிமிடம் ஒன்றிற்கு 60 சொற்கள் வேகத்தில் சுருக்கெழுத்துக் குறிப்பில் எழுதி மேற்படி குறிப்புக்களை நிமிடம் ஒன்றிற்கு 08 சொற்கள் வேகத்தில் பொதுவான முறையில் எழுதும் ஆற்றலினை அளவிட்டுப் பார்க்கும் பரீட்சை ஒன்றாகும். |
| 04 | தட்டெழுத்து ( சிங்களம் ) | கிட்டத்தட்ட 400 சொற்கள் கொண்ட உரை ஒன்றினை பிழையின்றி 20 நிமிடங்களுக்குள் நிமிடம் ஒன்றிற்கு 20 சொற்கள் வேகத்தில் தட்டச்சு செய்யும் ஆற்றலினை அளவிட்டுப் பார்க்கும் பரீட்சை ஒன்றாகும். |

08.2 தகைமையினை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சை -

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளர் அவர்களினால் நியமனம் செய்யப்படும் தகைமையினை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் சபை ஒன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

தகைமையினை மதிப்படுவதற்கான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் முறை -

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறை* | *ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை* | *ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 01.மேலதிக கல்வித் தகைமைகள் | 10 | ஏற்புடையதன்று |
| 02.மேலதிக தொழிற் தகைமைகள் | 20 | |
| 03. மொழி அறிவு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி தொடர்பான தேர்ச்சி) | 10 | |
| 04.கணினி அறிவு | 15 | |
| 05. அனுபவம் | 40 | |
| 06.நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டிய திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

08.3 **பொதுவான நேர்முகப் பரீட்சை :**

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளர் அவர்களினால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சைகள் சபை ஒன்றின் மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகளைப் பரீட்சித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

குறிப்பு :

தொழில் சார் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுள் வெற்றிட எண்ணிக்கையின் இருமடங்கானோர் தகைமையினைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். தகைமையினைப் பரீட்சிப் பதற்கான நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில் சார் பரீட்சை ஆகிய இரண்டிலும் பெற்றுக் கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறைக்கு அமைய மற்றும் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய பதவிக்காக இணைத்துக் கொள்ளப்படுவர்.

09. விண்ணப்பப்படிவத்தினை, செ.மீ. 22 - 29 (ஏ 4) அளவிலான தாள்களில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், 1 - 5 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், 6 -15 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் 16 முதல் ஏனைய தலைப்புக்கள் மூன்றாவது பக்கத்திலும் உள்ளடங்குமாறு தயாரித்தல் வேண்டும். அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்திலேயே தெளிவாக உள்ளடக்குதல் வேண்டும். சகல வகையிலும் பூர்த்தி செய்யப்படாத, அடிப்படைத் தகைமைகள் அற்ற, உரிய தினத்தன்று கிடைக்கப் பெறாத மற்றும் உரிய மாதிரிப் படிவத்தினை ஒத்திராத, விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதனையும் அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம் என்பதனையும், மேலும் அறியத் தருகின்றேன். விண்ணப்பப்படிவத்தினை இத்துடன் இணைக்கப்பட்டு உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறியத் தரப்படமாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பங்களைத் தாமதிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய நட்ட இழப்புக்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

**கவனிக்க** :

கோரப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் ஆவணங்களின் மூலப் பிரதிகளை முன்வைப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவம் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது

10. **பரீட்சைக் கட்டணங்கள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமாக ரூ. 1500.00 தொகையினை மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையின் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளர் அவர்களின் பெயரில் உள்ள கணக்கு இலக்கம் 176100159026581 இனைக் கொண்ட நடைமுறைக் கணக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டு உள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் சாராத பல்நோக்குப் பிரிவு 01 சேவை வகுதிக்குரிய சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை நிபந்தனைகள் என்பன இந்தப் பதவிக்கு ஏற்புடையனவாகும்.

திருமதி. சுபாஷினீ தயானந்த,
செயலாளர்,

2026.08.13.

| |
|---|
| இலக்கம் : ……………………… |
| (அலுவலக உபயோகத்திற்கு) |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு**

**கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் சாராத பல்நோக்குப் பிரிவு 01 சேவை வகுதிக்குரிய சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்) : ……………………………………………………

முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ……………………………………………………
……………………………………………………

(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்) : ……………………………………………………
……………………………………………………

முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ……………………………………………………
……………………………………………………

02. நிரந்தர முகவரி (சிங்களத்தில்) : ..............................................................................................................
..............................................................................................................................................

03. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ..............................................................................
..............................................................................................................................................

04. கடிதம் கிடைக்கப்பெற வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ) : ..............................................
..............................................................................................................................................

(நிரந்தர முகவரியில் இருந்து வேறுபடின் மாத்திரம் எழுதவும்)

05. மின்னஞ்சல் முகவரி : ..............................................................................................................

06. தொலைபேசி இலக்கம் : கையடக்க : .................................... நிலையான : ........................................................

(தொடர்புகொள்ளக்கூடிய கையடக்கத் தொலைபேசி இலக்கம் ஒன்றினை கட்டாயமாக எழுதவும்)

07. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

08. பெண் / ஆண் : .......................................................

09. பிறந்த திகதி : ஆண்டு : ........................... மாதம் : ....................... திகதி : ...............................

10. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தன்று வயது:

வருடங்கள் : ............. மாதங்கள் : .......................... நாட்கள் : ..................................

11. இனம் : ...................................................................

12. திருமணமானவரா / திருமணமாகாதவரா : ..................................................................

13. க.பொ.த. (உ.தரம்) பரீட்சைப் பெறுபேறுகள் :

| *தொ. இல.* | *பாடம்* | *முதலாவது தடவை*<br>*ஆண்டு : .........*<br>*பரீட்சை இல : ..........*<br>*தரம்* | *இரண்டாவது தடவை*<br>*ஆண்டு : .........*<br>*பரீட்சை இல : ..........*<br>*தரம்* | *மூன்றாவது தடவை*<br>*ஆண்டு : .........*<br>*பரீட்சை இல : ..........*<br>*தரம்* |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |

14. க.பொ.த. ( சா. தரம்) பரீட்சைப் பெறுபேறுகள் :

ஆண்டு ............................ பரீட்சை இல. .................................

| *பாடம்* | *சித்தி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

15. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 04 ஆம் பந்திக்கு அமைய தகைமைகள் -

I. கல்வித் தகைமைகள் : ..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

II. தொழில்சார் தகைமைகள் : ..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

III. அனுபவம் : ..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

16. மொழித் தேர்ச்சி - (உரிய கூட்டில் ✓ அடையாளம் இடவும்)

| | *மிகவும் நன்று* | *நன்று* | *சராசரி* | *பலவீனம்* |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

17. பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு :

விண்ணப்பதாரியின் உறுதியுரை :

..................................................... ஆகிய என்னால் இங்கு வழங்கப்பட்டு உள்ள சகல விடயங்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது கருணை அடிப்படையில் மாற்றுவழி ஒன்றாக வினைத்திறனின்மையின் அடிப்படையில் சேவையில் இருந்து ஓய்வு பெறச் செய்யப்பட்டோ இல்லை என்பதனையும், பதவியினை விட்டு விலகிச் சென்ற ஒருவராகக் கருத்தப்பட்டோ இல்லை என்பதனையும் உறுதிமொழிகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்ட ஏதேனும் விடயம் ஒன்று பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன் அறிய வருமாயின் தகைமை இழப்பதற்கு கட்டுப்பட்டு உள்ளேன் என்பதனையும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான ஒரு நிலைமை தொடர்பில் அறியவருமாயின் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படவும் கட்டுப்பட்டு உள்ளேன் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி : .............................................

.................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

08-245

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## இஸ்லாம் தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை - 2025 (2026)

01. 2024 மற்றும் 2025 ஆண்டுகளுக்கான இஸ்லாம் தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அதேவேளை, பரீட்சை 2026, நவெம்பர் மாதம் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. **பரீட்சை நிலையங்கள் :**

**உப அட்டவணை - 01** இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலுள்ள நகரங்களில் விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும் ஏதேனும் ஒரு நகரத்தில் போதுமான அளவு விண்ணப்பதாரர்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரர்கள் அந்நகரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வேறொரு பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

03. **மொழிமூலம் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். ஆயினும் விண் ணப்பதாரியொருவருக்கு தான் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரமே பரீட்சைக்குத் தோற்ற இட மளிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் படும் மொழிமூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இட மளிக்கப்படமாட்டாது.

04. **தகைமைகள் :**

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப் பதாரர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதாவது ஒன்றையேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத் தப்படும் அஹதிய்யா தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரபுக் கல்லூரி களினால் வழங்கப்படும் மௌலவி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.3 இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத் தப்படும் க. பொ. த. (உயர் தர)ப் பரீட்சையில் இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.4 இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப் படும் க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் இஸ்லாம் பாடத்தில் திறமைச் சித்தியுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அஹதிய்யா தஹம் பாடசாலையில் அல்லது அரபுக் கல்லூரியில் ஒரு வருடத்துக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்ற ஆசிரியராக இருத்தல்.

05. **விண்ணப்பித்தல் :**

5.1 பதிவு செய்யப்பட்டுள்ள அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபர் ஊடாக முன்வைக்கப்பட வேண்டிய இவ்விண்ணப்பப் படிவங்கள் தபால் மூலமாக அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக (www. doenets.lk) விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

5.2 உமது அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரி விண்ணப்பப் படிவங்களை விண்ணப் பிக்கும் புதிய அஹதிய்யா தஹம் பாடசாலை/ அரபுக் கல்லூரிகளாயின் முஸ்லிம் சமய பண்பாட்டலு வல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றிதழின் பிரதியினை விண்ணப்பப் படிவத் துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5.3 எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஆயினும் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள யாரேனும் பரீட்சைக்கு தோற்ற விரும்புவாராயின் தமது வதிவிடத்திற்கு அருகாமையில் உள்ள அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரி ஊடாக ரூபா 200.00 பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும். அதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்தும் அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5.4 உரிய அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரிகள் மூலம் முன்வைக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப் படிவத்தினை இரண்டு பிரதிகளாக பூரணப்படுத்தி மூலப் பிரதியினை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அதேவேளை இரண்டாம் பிரதியினை அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபர் தன்வசம் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இரண்டிலும் அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபரினால் கையொப்பம் இடப்பட்டு பதவி முத்திரை பதிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

5.5 விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பார்களாயின் அது தொடர்பாக விண்ணப்பப்படிவத்தில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியதோடு அது தொடர்பான மருத்துவ சான்றிதழ்களினது பிரதிகளை விண் ணப்பப்படிவத்தின் பிரதியுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

5.6 விண்ணப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2026.08.21 ஆம் திகதி ஆரம்பமாகி 2026.09.21 ஆம் திகதி முடிவுறுத்தப்படும்.

5.7 விண்ணப்பப்படிவங்களில் விண்ணபதாரர்களின் பெயர்களை எழுதும் போது பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய ஆளடையாள அட்டையில் குறிப் பிடப்பட்டுள்ளவாறே எழுதப்படுவதோடு பெறுபேறு வழங்கப்பட்ட பின்னர் பெயர் திருத்தங்களுக்காக கோரிக்கையின் போது அச்சுப்பிழை தவிர்ந்த வேறு எந்தவித கோரிக் கைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும் பிழை யின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.8 பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தாம் வழங்கிய தகவல்கள் சரியானவையா என்பதனை தாமாக பரிசீலனை செய்த பின்பே கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறும் வரை சகல பரீட்சார்த்திகளின் தேசிய ஆளடையாள அட்டையின் பிரதிகளையும் அஹதிய்யா தஹம் பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபர் தன்வசம் வைத்துக் கொள்ள வேண்டும்.

5.9 விண்ணபதாரர்களின் உரிய தகுதிகள் பெற் றிருப்பது பற்றி விண்ணப்பப்படிவங்களை சான்று படுத்தும் அதிபர் அல்லது தலைவர் அதற்குரிய முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5.10 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங் கப்பட்டுள்ள அஹதிய்யா பாடசாலைகளின்/ அரபுக் கல்லூரிகளின் கணினி இலக்கம் மற்றும் முகவரி பிழையின்றிக் குறிப்பிடப்படுவதோடு அஹதிய்யா பாடசாலைகளின் / அரபுக் கல்லூரி களின் முகவரி மாற்றம் அடைந்திருப்பின் அதனை அறியத்தருவதோடு அஹதிய்யா பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடவும்.

5.11 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை." எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக அறியத்தரப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இஸ்லாம் தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்ப் பரீட்சை - 2025 (2026)" என்பதையும் பரீட்சைக்குத் தோற்றும் நகரத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

5.12 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் தபாலில் தொலைந்து போதல் அல்லது காணாமல் போதல் மற்றும் தாமதமாக அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக முன் வைக்கப்படும் மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதற்கான அனைத்துப் பொறுப்பினையும் உரிய அஹதிய்யா பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபரே பொறுப்பேற்க வேண்டும்.

06. **பரீட்சைக் கட்டணம் :**

இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 200.00 ஆகும். ஆயினும் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணபதாரர்கள் இப்பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. நூனசித்தி பெறுபேற்றை பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் பாடத் திற்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 50.00 ஆகும்.

6.1 **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :** குறிப்பிட்ட அஹதிய்யா பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து விண்ணபதாரர்களிடமும் பரீட்சைக் கட்டணம் சேகரிக்கப்பட்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் வருமான தலைப்பு இலக்கம் 20-03-02-13 இற்கு வைப்பாகும் வகையில் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு தபால் நிலையத்திலும் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். அதன் நிழற்படப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

6.2 எக்காரணத்தினாலும் இப்பரீட்சைக்காக செலுத் தப்படும் கட்டணம் வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ அல்லது மீண்டும் திரும்பச் செலுத் தப்படவோ மாட்டாது.

07. **பரீட்சை அனுமதி அட்டை :**

பரீட்சைக்காக உள்வாங்கப்படும் அனைத்து விண்ணப் பதாரர்களுக்குமான அனுமதி அட்டைகள் விண்ணப்பப் படிவங்கள் முன்வைக்கப்பட்ட அஹதிய்யா பாடசாலை/

அரபுக் கல்லூரி அதிபர்களுக்கு பரீட்சை ஆணையாளர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது அனுமதி அட்டையில் கவனமாக கையொப்பத்தினை சான்றுபடுத்தி அதனை பரீட்சைக்கு தோற்றும் முதலாவது நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். யாரேனும் விண்ணப்ப தாரியொருவர் தனது அனுமதி அட்டையினை ஒப்படைக்காமல் இருந்தாலோ அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு பரீட்சை நிலையத்திற்கு சென்று பரீட்சைக்குத் தோற்றியிருந்தாலோ அவருடைய பரீட்சார்த்தித் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரர்களின் கையொப்பமானது உரிய அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபரினால் / அரபுக் கல்லூரி அதிபரினால் அல்லது கிராம அலுவலரால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அஹதிய்யா பாடசாலை அதிபர் / அரபுக் கல்லூரி அதிபர் மூலம் அது பற்றி தாமதமின்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறியத்தரவும். அத்தகைய அனைத்து சந்தர்ப்பத்திலும் கீழ் குறிப் பிடப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

1. பரீட்சையின் பெயர்
2. அஹதிய்யா பாடசாலையின் / அரபுக் கல்லூரி யின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்
3. அஹதிய்யா பாடசாலையின் / அரபுக் கல்லூரி யின் முகவரி
4. அஹதிய்யா பாடசாலையின் / அரபுக் கல்லூரி யின் கணினி இலக்கம்
5. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்
6. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் / நகரம்
7. விண்ணப்பப்படிவம் தபாலிடப்பட்ட தபால் நிலையம்
8. விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலிடப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி
9. பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அப் பற்றுச்சீட்டின் பிரதி

08. **ஆள் அடையாளம்** :

பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை நிலையத்துக்குள் தாம் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க முடியும்.

- ❖ தேசிய ஆளடையாள அட்டை
- ❖ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- ❖ செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகள் தமது ஆள் அடை யாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைத்துக்கொள்ளாதவாறு மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தாமையினை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை நிலையத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட்ட நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அவ்விடத்தில் இருந்து வெளியேறும் வரை பரீட்சார்த்திகளை இனங்காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகள் மறைக்கப்படாதவாறு இருத்தல் வேண்டும்.

09. பரீட்சைநடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கட்டுப் படுதல் வேண்டும். அந்தச் சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் மூலம் நடைமுறைப்படுத்தப் படும் தண்டணைகளுக்கு அப்பரீட்சார்த்தி ஆளாக வேண்டிய நிலை ஏற்படும்.

10. சித்தியடைந்தமையைத் தீர்மானித்தலும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதலும் :

இப்பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை ஐந்து (05) ஆவதோடு, பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் முழுமையான சித்தியைப் பெறுவதற்கு அப்பாடங்கள் ஐந்திலும் சித்தியடைய வேண்டும். எவ்வாறாயினும் ஒரே முறையில் உரிய பாடங்கள் நான்கில் ஏதாவது ஒரு பாடத்தில் சித்தியடையவில்லை எனின் அது நூன சித்தியாகக் கொள்ளப்படும். பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து அடுத்துவரும் இரண்டு (02) பரீட்சை வருடங்களுக்குள் நூன சித்தி பெற்ற பாடத்திற்காக மீண்டும் பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடையாத நூன சித்தியினை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு நூன சித்தியினைப் பெற்ற மாணவர்கள் நூன சித்தியினை பூரணப்படுத்தும் போது சித்தியடையாத பாடத்திற்கு மாத்திரமே பரீட்சைக்கு தோற்ற அனுமதி வழங்கப்படும்.

10.1 ஒவ்வொரு பாடத்திற்குமான வினாத்தாள்களுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படுவதோடு சித்தியடையும் தரங்களுக்குரிய புள்ளி அளவுகளும் குறியீடுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| *புள்ளி அளவு* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சித்தி | S |
| 55 - 69 | திறமைச் சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

10.2 விண்ணப்பதாரர்களின் பெறுபேற்று அட்டவணை, உரிய அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபருக்கு / அரபுக் கல்லூரி அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10.3 பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

11. **சான்றிதழ்** :

இப்பரீட்சையில் சித்திபெறும் அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்;கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபருக்கு / அரபுக் கல்லூரி அதிபருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சையில் சித்தியெய்தி சான்றிதழ் கிடைக்கப்பெறாத யாரேனும் பரீட்சார்த்திகள் இருப்பின் அது தொடர்பாக அஹதிய்யா தஹம் பாடசாலை அதிபர் ஊடாக அல்லது அரபுக் கல்லூரி அதிபர் ஊடாக “பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் பெறுபேற்றுக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை.” எனும் முகவரிக்கு கடிதம் மூலம் தெரிவிக்க முடியும்.

12. **விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல் :**

அஹதிய்யா பாடசாலை அதிபரின் அல்லது அரபுக் கல்லூரி அதிபரின் வேண்டுகோளிற்கிணங்க மாத்திரமே விடைத்தாள்கள் மீள் பரிசீலனைக்காக இடமளிக்கப்படும். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மாதிரிப் படிவத்தின் மூலம் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான கட்டணம் காலத்திற்கு காலம் மாறுபடுவதனால் அது பற்றி உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கோ விடைத் தாள்களை பரீட்சிக்க இடமளிக்கப்படமாட்டாது.

13. **பரீட்சை பற்றிய விபரம் :**

இப்பரீட்சை ஐந்து (05) வினாப்பத்திரங்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் உரிய காலம் மூன்று (03) மணித்தியாலங்கள் ஆகும். அவ் வினாப்பத்திரங்கள் பின்வருமாறு அமையும்.

01. அல் அகீதா வல் மஸாதிருஷ் ஷரீஆ (இஸ்லாமிய கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)
02. அல் பிக்ஹுல் இஸ்லாம் (இஸ்லாமிய சட்டநெறி)
03. அஸ்ஸீரா வத்தாரிகுல் இஸ்லாம் (ஸீராவும் இஸ்லாமிய வரலாறும்)
04. அல் அஹ்லாக் வஸ்ஸுலூக் (சமூகவியலும் ஒழுக்க வியலும்)
05. அல் லுகதுல் அரபிய்யா வல் அதபுல் இஸ்லாம் (இஸ்லாமிய இலக்கியமும் அரபு மொழியும்)

14. **வினாத்தாள் கட்டமைப்பு :**

- ஒவ்வொரு வினாப்பத்திரமும் பகுதி I, பகுதி II, பகுதி III என மூன்று (03) பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I சுருக்கமான விடையளிக்கும் பத்து (10) வினாக்களைக் கொண்டதோடு எல்லா வினாக் களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 04 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். (04 x 10 = 40 புள்ளிகள்)
- பகுதி II ஐந்து (05) கட்டமைப்பு வினாக்களைக் கொண்டது. அவற்றுள் விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 12 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். (12 x 04 = 48 புள்ளிகள்)
- பகுதி III கட்டுரை அமைப்பிலான இரண்டு (02) வினாக்களை உள்ளடக்கியது. அவற்றுள் விரும்பிய ஒரு வினாவிற்கு விடையளித்தல் வேண்டும். இப் பகுதிக்காக 12 புள்ளிகள் வழங்கப்படும். (12 x 01 = 12 புள்ளிகள்)

15. **பாடத்திட்டம் :**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இஸ்லாம் தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்ப் பரீட் சைக்குரிய பாடத்திட்டம் உப அட்டவணை - 02 இன் மூலம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப் பிடப்பட்டுள்ளது.

16. **மாதிரி வினாப்பத்திரம் :**

மாதிரி வினாத்தாள்கள் தொடர்பாக “பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 180, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.” என்னும் முகவரியின் கீழ் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 011-2667909 / 011-2669994 எனும் தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.

17. இந்த அறிவித்தல் மற்றும் பாடத்திட்டங்கள் ஆகிய வற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி செயற்பட அனைத்து விண்ணப்பதாரர்களும் கட்டுப்படுதோடு இந்நிபந்தனைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தேவைக்கேற்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விருப்பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவுறுத்தல்களில் மொழி மூலங்களில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை காணப் படின் சிங்கள மொழிமூலமான அறிவித்தலின் படி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

**ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே,**
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பத்தரமுல்லை, பெலவத்த,
2026, ஓகத்து 21.

**உப அட்டவணை - 01**

| *மாவட்ட இலக்கமும் மாவட்டமும்* | *நகர இலக்கம்* | *நகரம்* |
|---|---|---|
| 01 - கொழும்பு | 101 | கொழும்பு |
| 02 - கம்பஹா | 201 | நீர்கொழும்பு |
| 03 - களுத்துறை | 301 | களுத்துறை |
| 04 - கண்டி | 401 | கண்டி |
| 05 - மாத்தளை | 501 | மாத்தளை |
| 06 - நுவரெலியா | 601 | நுவரெலியா |
| 07 - காலி | 701 | காலி |
| 08 - மாத்தறை | 801 | மாத்தறை |
| 09 - ஹம்பாந்தோட்டை | 901 | ஹம்பாந்தோட்டை |
| 10 - யாழ்ப்பாணம் | 1001 | யாழ்ப்பாணம் |
| 11 - மன்னார் | 1101 | மன்னார் |
| 12 - வவுனியா | 1201 | வவுனியா |
| 13 - முல்லைத்தீவு | 1301 | முல்லைத்தீவு |
| 14 - கிளிநொச்சி | 1401 | கிளிநொச்சி |
| 15 - மட்டக்களப்பு | 1501 | காத்தான்குடி |
| 16 - அம்பாறை | 1601 | அக்கரைப்பற்று |
| 17 - திருகோணமலை | 1701 | கிண்ணியா |
| 18 - குருநாகல் | 1801 | சியம்பலாகஸ்கொடுவ |
| 19 - புத்தளம் | 1901 | புத்தளம் |
| 20 - அநுராதபுரம் | 2001 | அநுராதபுரம் |
| 21 - பொலன்நறுவை | 2101 | பொலன்நறுவை |
| 22 - பதுளை | 2201 | பதுளை |
| 23 - மொனராகலை | 2301 | பிபிலை |
| 24 - இரத்தினபுரி | 2401 | இரத்தினபுரி |
| 25 - கேகாலை | 2501 | கேகாலை |

**உப அட்டவணை - 02**

**01. அல் அகீதா வல் மஸாதிருஸ்ஸரீஆ**

**(இஸ்லாமிய கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)**

1.1 இஸ்லாமிய அகீதா

1.1.1 இஸ்லாமிய அகீதா பற்றிய அறிமுகமும் பொது விளக்கமும்

1.1.2 இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கம்

1.1.2.1 தவ்ஹீத்

- அல் உலூஹிய்யா
- அர் ருபூபிய்யா
- அஸ்மாஉல் ஹுஸ்னாவுக்கூடாக இறை பண்புகளை விளங்கல்

1.1.2.2 நூஹானிய்யாத்

1.1.2.3 நுபுவ்வாத்

1.1.2.4 ஸம்இய்யாத்

1.1.2.5 கழா கத்ர்

1.1.3 அகீதா சார்ந்த பிரிவுகள்

1.2 மஸாதிருஸ்ஸரீஆ

1.2.1 மஸாதிருந் நக்லிய்யா - அறிமுகம்

1.2.2 வஹி

- வஹியின் அவசியம்
- வஹியின் வகைகள்

1.2.3 அல்குர்ஆன்

1.2.3.1 அருளப்படலும் தொகுக்கப்படலும்

- தர்தீப் நுஸூல் தர்தீப் திலாவத்

1.2.3.2 அமைப்பு

- மக்கி - மதனீ
- நாஸிக் மன்ஸூக்
- முஹ்கம் - முதஷாபிஹ்
- அஸ்பாபுந் நுஸூல்

1.2.3.3 இஃஜாஸுல் குர்ஆன்

- மொழி ரீதியானவை
- சட்டம் தொடர்பானவை
- அறிவியல் சார்ந்தவை

1.2.3.4 தப்ஸீர் கலை

- தோற்றமும் வளர்ச்சியும்
- தப்ஸீர்கள் (மன்கூல், மஃகூல், நவீன தப்ஸீர்கள்)

1.2.3.5 அல்குர்ஆனுடன் தொடர்பு

- அல்குர்ஆனை அணுகும் முறை
- அல்குர்ஆனின் இலக்குகள்
- அல்குர்ஆனைக் கற்கும் முறை

1.2.4 அஸ்ஸுன்னா

1.2.4.1 பத விளக்கமும் பிரயோக விளக்கமும்

1.2.4.2 சட்டவாக்க மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா

1.2.4.3 ஹதீஸ் பாதுகாக்கப்படல்

- நபி (ஸல்) அவர்களின் காலம்
- ஸஹபாக்களின் காலம்
- தாபிஈன்கள் காலம்
- தபஉத் தாபிஈன்கள் காலம்
- நவீன காலம்

1.2.4.4 ஹதீஸை அடியொட்டி

- அஸ்மாஉர் ரிஜால்
- இல்முல் ஜரஹ் வத் தஃதீல்
- உஸுலுல் ஹதீஸ்

1.2.4.5 ஹதீஸை விளங்குதல்

- ஹதீஸ் முழு வாழ்க்கைக்குமான வழிகாட்டி
- ஹதீஸ் தொகுப்புகள்

1.2.4.6 ஹதீஸை அணுகுதல்

- பல்வேறு துறைசார் ஹதீஸ்களை விளங்குதல் (சூழல் பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரம், அறிவியல்)

1.2.5 துணை மூலதாரங்கள்

1.2.5.1 இஜ்திஹாத்

- பதவிளக்கமும் பிரயோக விளக்கமும்
- அதன் அவசியம்
- சட்ட சிந்தனைப் பிரிவுகள் (மத்ரஸதுல் அஸர், மத்ரஸதுல் ரஉயு)

1.2.5.2 முஜ்தஹித்கள்

- தகைமைகளும் வகைகளும்
- அவர்களின் பங்களிப்புகள்
- மத்ஹபுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

1.2.5.3 துணை மூலாதாரங்கள்

- பொறிமுறையும் பயன்பாடும் இஜ்மா, கியாஸ், மஸ்லஹா முர்ஸலா, உர்ப், ஷரஉ ஸாபிகா, இஸ்திஹ்ஸான், இஸ்திஸ் ஹாப், கவ்லுஸ்ஸஹாபா, ஸத்துஸ் ஸராஇ,

02. அல் பிக்ஹுல் இஸ்லாம் (இஸ்லாமிய சட்டநெறி)

2.1 இபாதத்

2.1.1 தஹாரத் : நஜீஸ் பற்றிய விளக்கம்

- விதிமுறைகளும் சட்டதிட்டங்களும்

2.1.2 இபாதத்

- பதவிளக்கமும், பிரயோகமும்
- இபாதத் வகைளும், அவற்றின் தத்துவங்களும்
- ஈமானுக்கும் இபாதத்துக்கும் இடையிலான தொடர்பு

2.2 அடிப்படை இபாதத்துகள்

2.2.1 தொழுகை

- முக்கியத்துவம்
- வகைகள்
- விதிமுறைகள்
- பயன்கள்

2.2.2 ஸகாத்

- முக்கியத்துவம், விதிமுறைகள்
- பயன்கள்
- ஸகாத்தை நிறுவனமயப்படுத்தலின் அவசியம்
- ஸகாதுல் பித்ர்

2.2.3 நோன்பு

- முக்கியத்துவம், வகைகள்
- விதிமுறைகள்
- பயன்கள

2.2.4 அல் ஹஜ்

- முக்கியத்துவம்
- விதிமுறைகள்
- பயன்கள்

2.2.5 உபரி வணக்கங்கள்

- ஸதகா, உம்றா
- திலாவதுல் குர்ஆன், தவ்பா
- இஸ்திஃபார், திக்ர்
- அவ்ராத், துஆ - கவ்ப், ரஜா, ரிழா, தவக்குல், வரஉ, ஸுஹ்த் - ஸியாரதுல் குப்ர், குர்பானிகள்

2.3 முஆமலாத்

2.3.1 இஸ்லாமிய பொருளாதாரம்

- அறிமுகம்
- சிறப்பியல்புகள்

2.3.2 பொருளீட்டலும் செலவிடலும்

- உழைப்பின் முக்கியத்துவம்
- விவசாயம் (முஸாரஆ, இஹ்யாஉல் மமாத்)
- கைத்தொழில்

2.3.3 வியாபாரம்

- முக்கியத்துவம்
- இஸ்லாம் அனுமதித்த வியாபார முறைகள் (ஸம்ஸரா, பைஉத் தக்ஸீத், முழாரபா, முஷாரகா, முராபஹா, இஜாரா, ரஹ்ன்)
- நவீன வியாபார முறைமைகள் (ஏனைய வியாபார முறைகளுடன் ஒப்புநோக்கல்,
  உ-ம் : வங்கி, காப்புறுதி)

2.3.4 இஸ்லாத்தில் ஹராமாக்கப்பட்டுள்ள தொழில்சார் நடவடிக்கைகள்

- கலப்படம், பதுக்கல், ஏமாற்றல்
- இலஞ்சம், சூது, வட்டி
- ஹராமான பொருட்களின் விற்பனை

2.4 முனாகஹாத்

2.4.1 நிகாஹ்

- நிகாஹ் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்
- நிகாஹ்
- சட்ட விதிகள்
- பலதார மணம்

2.4.2 குடும்பம்

- குடும்ப வாழ்வின் முக்கியத்துவம்
- கணவன்
- மனைவி உறவு
- கடமைகளும் உரிமைகளும்
- குழந்தை வளர்ப்பு தொடர்பான போதனைகளும், வழிகாட்டல்களும்
- பெற்றோர் - பிள்ளை கடமைகளும் உரிமைகளும்
- வாரிசுரிமை

2.4.3 விவாகரத்து

- விவாகரத்து பற்றிய இஸ்லாமிய நோக்கு
- வகைகளும் விதிமுறைகளும்
- இத்தா - விளக்கம், விதிகள், தாபரிப்பு

2.5 ஜினாயாத்

2.5.1 ஜினாயாத் - அறிமுகம்

2.5.2 குற்றங்கள்

- வகைகள்
- குற்றப் பரிகாரம்

2.5.3 தண்டனைகள்

- தண்டனை பற்றிய இஸ்லாமிய நோக்கு
- ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்
- கப்பாரா, பித்யா

**03. அஸ்ஸீரா வத்தாரிகுல் இஸ்லாம் (ஸீராவும் இஸ்லாமிய வரலாறும்)**

3.1 வரலாறு பற்றிய இஸ்லாமிய நோக்கு

- இஸ்லாமிய வரலாற்றின் தனித்துவமான பண்புகள்

3.2 வரலாற்றுக் கட்டங்கள்

3.2.1 நபி (ஸல்) அவர்களின் காலம்

- நபி (ஸல்) அவர்களுக்கு முற்பட்ட உலகம்
- நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கைப் பகுதி
- நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கைப் பகுதி

3.2.2 குலபாஉர் ராஷிதீன்களின் காலம்

- கலீபாக்களின் தெரிவுமுறை
- இராசசியப் பரம்பல்
- காரணமும் முறையும்
- நிருவாக, நிதி, நீதி அமைப்புக்கள்
- எதிர்நோக்கிய சவால்கள்
- கலீபாக்களின் ஆளுமைப் பண்புகளும், முன் மாதிரிகளும்

3.2.3 பிற்பட்ட கலீபாக்களின் காலம்

3.2.3.1 உமையா காலம்

- உமையாக்களின் எழுச்சி
- பிரதான கலீபாக்கள்
- ஆளுமைப் பண்புகளும், பங்களிப்புக்களும் (முஆவியா, அப்துல் மலிக், வலீத்,
  உமர் இப்னு அப்துல் அஸீஸ்)
- இராச்சியப் பரம்பலும், விளைவுகளும் - எதிர்நோக்கிய பிரச்சினைகள்

3.2.3.2 அப்பாஸியர் காலம்

- அப்பாஸியர் எழுச்சி
- பிரதான கலீபாக்களும் அவர்களின் பங்களிப்புக்களும் (மன்ஸுர், ஹாரூன், மாமூன்)
- பிற்பட்ட கலீபாக்களின் ஆட்சியை குலபாஉர் ராஷிதீன்கள் ஆட்சியுடன் ஒப்பிட்டு நோக்கல்

3.2.3.3 ஏனைய அரசுகள்

- ஸ்பானிய உமையா ஆட்சி
- இந்திய மொகலாயராட்சி
- துருக்கிய உஸ்மானியராட்சி

3.2.3.4 தற்கால முஸ்லிம் உலகம்

3.3 இஸ்லாமிய கலைகள்

3.3.1 அறிவியல் கலைகள்

- அறிவியல் கலைகள் பற்றிய இஸ்லாமிய நோக்கு
- பின்வரும் கலைகளின் வளர்ச்சியும் ஆக்கப் பங்களிப்புக்களும், தத்துவம், மருத்துவம், வரலாறு, கணிதம், வானியல், புவியியல்

3.3.2 அழகியற் கலைகள்

- அழகியற் கலைகள் பற்றிய இஸ்லாமிய நோக்கு
- பின்வரும் கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

(கிறாஅத் கலை, எழுத்தணிக் கலை, அறபெஸ்க், கட்டிடக்கலை, மினியேச்சர், இசைக்கலை)

3.4 இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜித்களின் பங்களிப்பு

- மஸ்ஜிதுகளின் தோற்றமும் பணிகளும்
- பின்வரும் மஸ்ஜிதுகளின் தோற்றமும், முக்கியத்துவமும்

(மஸ்ஜிதுல் ஹரம், மஸ்ஜிதுல் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா)

3.5 இலங்கை முஸ்லிம்களின் வரலாறு

3.5.1 அறபிகளின் வருகை

3.5.2 இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாதல்

3.5.3 இலங்கை முஸ்லிம்கள்

- குடிப் பரம்பலும் பழைய, புதிய குடியிருப்புக்களும்
- தேசிய பங்களிப்புக்கள்

3.5.4 சமய, சமூக அமைப்புகள்

- மஸ்ஜித்கள்
- முஸ்லிம் தனியார் சட்டம்
- வக்பு, விவாக முறிவு தொடர்பான சட்டங்கள்
- காழி மன்றமும், காழி மேன்முறையீட்டுச் சபையும்
- முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

3.6 முஸ்லிம் வரலாற்று நாயகர்கள்

3.6.1 ஸஹாபாக்கள்

- முஸ்அப் இப்னு உமைர் (ரழி)
- பிலால் (ரழி)
- ஸைத் இப்னு ஸாபித் (ரழி)
- துல்பிஜாதைன் (ரழி)
- உம்மு அமாரா (ரழி)
- அஸ்மா பிந்தி அபூபக்கர் (ரழி)
- பாத்திமா (ரழி)

3.6.2 தாபிஈன்கள் - இமாம்கள்

- உமர் இப்னு அப்துல் அஸீஸ்
- ஸஈத் இப்னு முஸையப்
- அதா இப்னு அபீ ரபாஹ்
- இமாம் ஸுஹ்ரி

3.6.3 சிந்தனையாளர்கள் - சீர்திருத்தவாதிகள்

- அப்துல் காதிர் ஜீலானி
- இமாம் கஸ்ஸாலி
- அபுல் ஹஸன் சாதுலி
- இப்னுல் கையூம் அல் ஜவ்ஸி
- முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப்
- மௌலானா இல்யாஸ்
- இமாம் ஹஸனுல் பன்னா
- மௌலானா மௌதூதி

**04. அல் அஹ்லாக் வஸ்ஸுலூக் (சமூகவியலும் ஒழுக்க வியலும்)**

4.1 சமூகவியல்

4.1.1 அறிமுகம்

- மனிதன், பிரபஞ்சம், வாழ்வு பற்றிய இஸ்லாமிய நோக்கு

4.1.2 தனி மனிதன்

- சமூகத்தில் தனி மனிதனின் பங்கு
- சமூகத்தை நோக்கிய தனி மனிதனின் கடமை

4.1.3 குடும்பம்

- தனி மனிதனும் குடும்பமும்
- முஸ்லிம் சமூக அமைப்பில் குடும்பத்தின் பங்கு
- தனி மனித உருவாக்கத்தில் குடும்பத்தின் பங்கும் பணியும்
- குடும்ப உறவு
- உறவினரும் அயலாரும்

4.1.4 சமூகம்

- இஸ்லாமிய சமூக அமைப்பின் பண்புகள் (சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் நீதி) - தனி மனிதனும் சமூகமும் (உரிமைகள்)
- நன்மைகளை வளர்த்தல் தீமைகளைக் களைதல்
- இஸ்லாமிய பயிற்றுனரின் பண்புகளும் பணிகளும்
- பல்லின சமூகத்துடனான முஸ்லிம்களின் உறவு
- நலிவுற்றோருக்கான பாதுகாப்பு
- தொழில் வழிகாட்டல்
- சமூக ஒழுக்கங்கள் (சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், தவாஸுன், தலைமைத்துவத்திற்கு கட்டுப்படல், சமூகத் தொடர் பாடல்)
- சமூக உறவை வலுப்படுத்தக்கூடியனவும் சீர்கு-லைப்பனவும்

4.2 ஒழுக்கங்கள்

4.2.1 இறைவனுடனான உறவு

- இஃலாஸ்
- இறையச்சம் (தக்வா)
- தவக்குல்
- இறைத் தீர்ப்பை திருப்தியுடன் ஏற்றல்
- இறைவன் மீது அன்பு வைத்தல்
- நன்றியுணர்வு

4.2.2 மனித உறவு தொடர்பான சமூக ஒழுக்கங்கள்

- சகோதரத்துவம்
- வாய்மை
- நாணயம்
- மன்னிக்கும் மனப்பான்மை
- தூய்மை
- சுத்தம்
- இரக்கம்
- வெட்கம்
- பொறுமை

4.2.3 ஏனைய உயிரினங்கள், பௌதீக பொருட்கள் தொடர்பான ஒழுக்கங்கள்

- உயிரினங்கள் மீது அன்பு செலுத்தலும் நலன் புரிதலும்
- பௌதீக சூழலை பாதுகாத்தல்
- நாட்டு நலன் பேணல்
- அனர்த்த முகாமைத்துவம்

**05. அல் லுகதுல் அரபிய்யா வல் அதபுல் இஸ்லாம் (இஸ்லாமிய இலக்கியமும் அரபு மொழியும்)**

5.1 இஸ்லாமிய இலக்கியம்

- இஸ்லாமிய இலக்கியத்தின் கொள்கைகளும் கோட் பாடுகளும்
- நவன இஸ்லாமிய இலக்கியம் ஓர் அறிமுகம்

5.2 பின்வருபவர்களின் இஸ்லாமிய இலக்கியப் பங்களி புகள்

தமிழ் மொழி மூலம் :-

- எம்.ஸீ. சித்தி லெப்பை
- கலாநிதி எம்.எம். உவைஸ்
- ஏ.எம்.ஏ. அஸீஸ் - உமர் ஹஸ்ரத்
- யு.எம். தாஸீம் - கவிஞர் அப்துல் காதர் லெப்பை

சிங்கள மொழி மூலம் :-

- கலாநிதி எம்.எம். உவைஸ்
- எஸ்.எம். மன்சூர்
- ஏ.எம். ஷாஹுல் ஹமீத்
- எம்.எச்.எம். ஷம்ஸ்
- எம்.ஏ. முஹம்மத் மாஸ்டர் (திக்வெல்ல)
- மாத்தறை காஸிம் புலவர்

5.3 அறபுத் தமிழ்

5.3.1 அறபுத் தமிழ் அறிமுகம்

- அறபுத் தமிழ் தோற்றமும் வளர்ச்சியும்

5.3.2 பின்வரும் ஆக்கங்கள் தொடர்பான அறிவு

- பத்ஹுத்தையான் - ஆலிமுல் அரூஸ்
- தப்ஸீர் - ஷெய்கு முஸ்தபா (பேருவலை)
- இப்னு நுபாதாவின் குத்பாக்கள்
- மீஸான் மாலை
- தலைப் பாத்திஹா
- தக்கசூரூத்

5.4 அறபு மொழி

5.4.1 மொழித்திறன் விருத்தி

- செவிமடுத்தல்
- உரையாடல்
- வாசித்தல்
- எழுதுதல்

5.4.2 அன்றாட வாழ்வில் பயன்படுத்தக்கூடிய சொற்களும், சொற்றொடர்களும்

- சிறு வாக்கியங்கள்

5.4.3 அறபியிலிருந்து தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது சிங்களத்துக்கும் சிங்களம் அல்லது ஆங்கிலம் அல்லது தமிழிலிருந்து அறபிக்கும் மொழி பெயர்த்தல்

5.4.4 தரப்பட்ட உரைப் பகுதியிலிருந்து வினாக்களுக்கு விடையளித்தல்

- தரப்பட்ட உரைப் பகுதிக்கு உயிர்க் குறியீடுகள் வைத்தல்

5.4.5 அல்குர்ஆன், ஸுன்னா இலக்கியங்களை நயத்தல்

- முப்ரதாதுல் குர்ஆன்
- சந்தர்ப்பங் கூறல்

5.4.6 அஹ்காமுத் தஜ்வீத்

- தஜ்வீத் சட்டங்கள்

5.4.7 இலக்கணம் தொடர்பான அறிவு

5.4.7.1 அஸ்ஸர்பு

- இறந்தகால, நிகழ்கால வினைகள்
- தன்மை, முன்னிலை, படர்க்கை வினைகள்
- ஆண்பால், பெண்பால், ஒருமை, பன்மை வேறுபாடுகள்
- ஏவல் வினை
- இறந்தகால, நிகழ்கால செயற்பாட்டு வினைகள்
- வினையடி (மஸ்தர்)
- இஸ்மு பாஇல், இஸ்மு மப்ஊல்
- பன்மை வடிவங்கள்

5.4.7.2 அந்நஹ்வு

- அல் முப்ததா, வல் கபர்
- அல் பிஅல் வல் பாஇல்
- அஸ்மாஉல் இஷாரா
- அஸ்ஸிபாத்
- ஹுரூபுல் ஜர்ரு
- அல் முழாப் வல் முழாப் இலைஹி
- கான வஅகவாதுஹா
- இன்ன வஅகவாதுஹா
- அல் ஹால்

08-251

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான III ஆவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2026

1.0 மேற்படி சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக, இலக்கம் 2444/21 மற்றும் 2025.07.08 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் மற்றும் இலக்கம் 2493/61 மற்றும் 2026.06.19 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின் நான்காவது திருத்தத்தின் விதிகளுக்கு இணங்க, III ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2026 திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சையானது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படுவதுடன், கோரப்பட்ட நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, அவ்விண்ணப்பதாரிகள் தங்களின் இரண்டாவது விருப்பாகக் குறிப்பிட்டுள்ள நகரத்தில் அல்லது அதற்கு அருகிலுள்ள வேறொரு நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு வழிப்படுத்தப்படுவர். மேலும், முன்மொழியப்பட்ட அனைத்து நகரங்களிலோ அல்லது பெரும்பாலான நகரங்களிலோ பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Applications - Recruitment / E.B. Exams” ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறையின் மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் 2026, ஓகத்து மாதம் 25 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து இரண்டு (02) அச்சிடப்பட்ட

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்விரண்டு பிரதிகளினதும் உரிய பகுதிகளைக் கையெழுத்தினால் பூரணப்படுத்தி, விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்து, வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அதில் ஒரு பிரதியைத் தத்தமது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும். மற்றைய பிரதியைத் தேவையான போது சமர்ப்பிப்பதற்காகத் தமது பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைக் கடைசித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எத்தகைய அசௌகரியங்களையும் விண்ணப்பதாரியே எதிர் கொள்ளவேண்டும்.

2.0

I. இப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு பரீட்சாத்திகள் கீழ் படிதல் வேண்டும்.

II. பரீட்சை அபேட்சகத்துவத்தைப் பெற்றுக்கொள் வதற்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிமுறைகளை மீறும்பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

III. இப்பரீட்சைக்கு, இலங்கை ஆசிரியர் சேவையிலும் மாகாண அரசாங்க சேவைகளின் ஆசிரியர் சேவை யிலும் உள்ள, கீழே 12.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

IV. இப் பரீட்சையில் விசேட தேவையுடைய விண் ணப்பதாரிகள் தோற்றுவார்களாயின், அது தொடர்பில் விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், தொடர் புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப் பிக்கப்பட வேண்டும்

3.0 **பரீட்சைக் கட்டணம்:**

இவ்வினைத்திறன்காண்தடைதாண்டல்பரீட்சையானது முதல் தடவையாக நடாத்தப்படுவதனால், இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

4.0 **விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்:**

நிகழ்நிலை மூலமான பரீட்சை விண்ணப்பப் படிவமானது ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியானது செல்லுபடியாகும் விண்ணப்பமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா / நிராகரிக்கப்பட்டதா என்பது, முறை மைக்குள் பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை மூலம் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறி வுறுத்தல் பத்திரிகையை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது அவ்வறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எத்தகைய திருத்தங்களும் செல்லு படியாகும் திருத்தங்களாகக் கருதப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையக் கூடிய வகையில் தத்தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லு படியாகும்.

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அத்துடன், பரீட்சார்த்திகள் தங்களது ஆள் அடை யாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியவாறு முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தொடர் பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு இரு காதுகளையும் மறைக்காமலும் பரீட்சை மண்ட பத்தினுள் நுழைய வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக் கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த சந்தர்ப்பத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

6.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண் ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்தின் அடிப் படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் வெளியிடப்படும்.

பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்ட உடன், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது தொடர்பான விபரம் இணையத்தள அறிவித்தல்

ஒன்றின் ஊடாக அல்லது விண்ணப்பதாரிகளுக்குக் குறுஞ்செய்தி மூலமாகக் காண்பிக்கப்படும். தமக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கை கடிதத்தை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நகல் பிரதியினை தங்களிடம் வைத்திருப்பது பிரயோசமானதாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தை பரிசீலித்துப் பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களுக்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.0 ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் என்றோ அல்லது அதற்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டலுக்கான பூர்த்தி செய்துள்ளார் என்றோ ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

8.0 பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்ப தாரரின் கையொப்பமான வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறான அனுமதிப் பத்திரம் இன்றி பரீடசைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9.0 பரீட்சை விண்ணப்பதாரிகள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளி யிடப்பட்ட அனுமதிப் பத்திரங்களைக் கொண்டுள்ள உத்தி யோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய வகையில், திணைக்களத் தலைவர்களினால் தேவையானவாறு கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். இதற்காகப் பிரயாணக் கட்டணங்கள் வழங்கப்படமாட்டாது.

11.0 இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். அவற்றுள், தங்களது நியமனப் பாடத்திற்குரிய மொழி மூலமாக அல்லது ஏதேனும் ஒரு அரச கரும மொழி மூலமாகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றுகின்ற ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

12.0 இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் மாகாண அரச சேவையின் அசிரியர் சேவையின் 2 ஆம் வகுப்பு தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்டு நான்கு (04) வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் III ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டலை பூர்த்தி செய்தல் வேண்டும். அவ்வுத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, தரம் 2-I இற்கு பதவியுயர்வு பெற்று நான்கு (4) வருடங்கள் நிறைவடைந்து, 2025.06.30 ஆம் திகதியின் பின்னர் வகுப்பு I இற்குப் பதவி உயர்வு பெறுவதற்கான ஆசிரியர்கள் I இற்குப் பதவி உயர்வு பெறுவதற்காக III ஆவது வினைத்திறன்காண் தடைத்தாண்டலுக்கான தேவைகளை கட்டாயமாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.0 **பரீட்சை நடைமுறை :**

13.1 வினாக்களின் கட்டமைப்பு

கல்வி அமைச்சினால் e-thaksalawa உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள, கீழே 13.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுயகற்றல் இதவடிவங்கள்தொடர்பான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பரீட்சை தயாரிக்கப்படும். இவ் வினைத்திறன்காண் தடைத் தாண்டலுக்குரிய எழுத்துப் பரீட்சையானது, தொடர்புடைய அனைத்துத் இதவடிவங்களையும் உள்ளடக்கும் வகையில் பின்வருமாறு நடாத்தப் படும்.

| கட்ட மைப்பு | வினாத் தாளின் அமைப்பு | காலம் | புள்ளி கள் |
|---|---|---|---|
| I வது வினாத் தாள் | பல் தேர்வு வினா | 01 மணித் தியா லம் | 40 |
| II வது வினாத் தாள் | கட்டமைக்கப் பட்ட வினா அல்லது பகுதியளவில் கட்ட மைக்கப் பட்ட வினாக்கள் | 02 மணித் தியா லங்கள் | 60 |

குறிப்பு 1 – I வது ஆனது வினாத்தாள் ஆக விடயம்சார் வினாத்தாள் I வழங்கப்படும் என்ப துடன், அது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்ட தாக அமைந்திருக்கும், அத்துடன், II ஆவது

வினாத்தாள் ஆக விடயம்சார் அறிவு வினாத் தாள் II வழங்கப்படும். அது 04 பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். அவ்விரண்டு வினாத்தாள்களினதும் உள்ளடங்கியுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும்.

13.2 **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| *வினைத் திறன் காண் தடைதாண்டல்* | *உரிய இதவடிவங்கள்* |
|---|---|
| III ஆவது வினைத் திறன் காண் தடை தாண்டல் | 1. உடல் மற்றும் உள நலன் பேணல் |
| | 2. இருபத்தியோராம் நூற்றாண்டின் பாடசாலை |
| | 3. செயன்முறை அடிப்படையிலான ஆராய்ச்சி |

குறிப்பு 2 - சித்தியடைவதற்காக மேலே 13.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.

14.0 **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்** : பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் நடைமுறை பின்வருமாறு அமையும்.

I. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களினதும் (தேசிய மற்றும் மாகாண) பெறுபேறுகள், மாகாண மட்டங்களில் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இரண்டு பிரதிகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

II. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தகைய பரீட்சை பெறுபேற்று ஆவணங்களின் இரண்டு பிரதிகளில் ஒரு பிரதியானது தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பரீட்சை பெறுபேறுகளை உறுதிப் படுத்திக் கொள்ளக் கூடிய வகையில், மாகாண கல்வி அமைச்சுக்கு / திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

III. அதேபோன்று, அனைத்து ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களினதும் நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் தரங்களுக்கான பதவியுயர்வுகளுக்கும் ஏதுவாக அமையும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பெறுபேறுகளை, பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக விண்ணப்பதாரிகளும் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் பெறுபேற்றுப் பத்திரத்தை விண்ணப்பதாரி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அந்தப் பெறுபேற்றுப் பத்திரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி அமைச்சு / மாகாண கல்விப் பணிப்பாளரிடமிருந்து உறுதிப்படுத்திக் கொண்தடன் பின்னர் உரிய உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும்.

IV. அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, மாகாண/வலயக் கல்வி அதிகாரிகளினால் உரிய ஆசிரியர்களின் நியமனங்களை நிரந்தரப்படுத்துவதற்கும் மற்றும் தரங்களுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

V. பரீட்சை பெறுபேறுகள் சம்பந்தமாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

15.0 இப்பரீட்சை அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

16.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
“இசுருபாய",
பத்தரமுல்ல,
2026 .......................................... திகதி.

**அட்டவணை I**

| *மாவட்டம்/ நகரம்* | *மாவட்டம்/ நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

08-283

---

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது 2026, நவெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Applications- Recruitment/E.B. Exams" என்பதனூடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் 2026, ஓகத்து மாதம் 24 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகி, 2026, செத்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி பி.ப 9.00 மணியுடன் நிறைவடையும். நிகழ்நிலை விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து, அச்சிடப்பட்ட பிரதியில் உரிய பகுதிகளைக் கையெழுத்தால் பூர்த்தி செய்து, விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, உரிய நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

02. இப் பரீட்சை தொடர்பான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் இலக்கம் 1928/28 மற்றும் 2015.08.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. வசதி கருதி இதற்குரிய பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

03. பரீட்சை பற்றிய விபரங்கள் :

| *வினாத்தாள்கள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. கல்விக் கொள்கைகள் | காலம் 02 மணித்தியாலங்கள் | 100 | 50 |
| 02. விடயம் சார் கற்கை | காலம் 02 மணித்தியாலங்கள் | 100 | 50 |

4. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்.

5. பரீட்சைக்கான பாடத் திட்டம்:

| *வினாத்தாளின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| 01. கல்விக் கொள்கைகள் | (அ) பொதுக் கல்விக் கொள்கை - அரசாங்கத்தால் வெளியிப்பட்ட சமகால கல்வி அறிக்கைகள் பற்றிய விண்ணப்பதாரரின் அறிவைப் பரிசோதிப்பதற்காக வினாக்கள் தயாரிக்கப்படும். கொள்கைகளில் வெளிப்படுத்தப்படும் மாற்றங்களால் தமது கடமைச் சேவையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றிய விண்ணப்பதாரரின் அறிவைப் பரிசோதிப்பது எதிர்பாரக்கப்படுகின்றது.<br><br>(ஆ) பாடசாலைக் கலைத்திட்டம் - பாடசாலை முறைமையின் பல்வேறு கட்டடங்களிலுள்ள கலைத்திட்டம் சார்ந்த துறை பற்றியும் கலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் பற்றியும் விண்ணப்பதாரரின் பொதுவான புரிதலைப் பரிசோதித்தல். பாடசாலைகளின் மனித மற்றும் பௌதிக வளங்கள் போன்றவை பற்றி விண்ணப்பதாரர்களுக்குப் புரிதல் இருக்க வேண்டும் என்பதுடன், அந்த நோக்குடன் கலைத்திட்டம் குறித்து விமர்சன ரீதியாகக் கருத்துக்களை முன்வைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். |
| 02. விடயம் சார் கற்கை | விண்ணப்பதாரரின் ஆக்கபூர்வமான மற்றும் தர்க்கரீதியான சிந்தனை ஆற்றலையும் பிரச்சினை தீர்க்கும் திறனையும் பரிசோதிப்பதற்காகத் தயாரிக்கப்படும் வினாத்தாளாகும். |

06. உத்தியோகத்தர் ஒருவர் இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்கு ஒரே தடவையிலோ அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களிலோ தோற்ற முடியும்.

07. பரீட்சையின் மொழி மூலம் :

i. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

ii. விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் ஏதாவது ஒரு மொழியில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

iii. விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் இணைவதற்காகத் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவர்கள் எனின், அரசாங்க சேவையில் இணைவதற்குத் தகுதி பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்திலேயே விடைகளை எழுதுத வேண்டும்.

iv. விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு உரிமையற்ற ஒரு மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவது தெரியவந்தால், அவரது விண்ணப்பதாரர் தகைமை இரத்துச் செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

08. நிகழ்நிலைப் (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலை ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாகத்

திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ஏற்றுக் கொள்ளப்படவில்லையா என்பது, முறைமையினுள் (System) பிரவேசிப்பதற்குப் பயன்படுடத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தைப் (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களை தவறாது பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்த வொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருத்தப்படமாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும்.

இப் பரீட்சைக்காக விசேட தேவைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தோற்றுவதாயின், அது குறித்து விண்ணப்பப்படிவத்தில் கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டும்என்பதுடன்,உரியமருத்துவச்சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இணைத்து, பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

09. **போலியான தகவல்களை வழங்குதல்** :

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைகளின்படி எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் என வெளிப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரர் தகைமை இரத்துச் செய்யப்படலாம்.

10. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) முதன்முறையாக விண்ணப்பிக்கும் போது கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னரான ஒவ்வொரு முறைக்கும் ஒரு பாடத்திற்கு ரூபா 600.00 வீதம் அறவிடப்படும்.

(ஆ) முதன்முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிப்பதாகத் தவறாகக் குறிப்பிட்டு, கட்டணம் செலுத்தாமல் பரீடசைக்குத் தோற்றி, அது பின்னர் அது தொடர்பில் தெரிய வரும் பட்சத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளின் பாதகமான விளைவுகளுக்கு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும்.

பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையினால் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

i. ஏதேனும் வங்கி கடன் அட்டை மூலம்
ii. இணையவழி செலுத்துகை வசதி கொண்ட ஏதேனும் வங்கி பற்று அட்டை மூலம்
iii. இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி முறைமை/ Flex செயலி மூலம்
iv. ஏதேனும் இலங்கை வங்கி கிளை மூலம்

குறிப்பு :

(அ) மேலே குறிப்பிட்டுள்ள முறைகள் மூலம் கட்டணங்களைச் செலுத்தும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையதளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் வெளியிடபபட்டுள்ளன.

(ஆ) கட்டணம் பெறப்பட்டமை குறித்து குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப் பட்ட கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப் பித்துள்ளனர் என்ற ஊகிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை மூலமாக மாத்திரம் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய அறிவித்தல்/ குறுஞ்செய்தி மூலம் விண்ணப்ப தாரர்களுக்கு அறியத்தரப்படும். தனது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு, தயாரித்த கோரிக்கை கடிதத்தை இணைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல்

முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நகல் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் அதற்கான பற்றுச்சீட்டின் நகல் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் அதற்கான பற்றுச்சீட்டின் கல பிரதியைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தைப் பரிசோதித்துப் பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின், கால தாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்திற்கு அமைய உரிய திருத்தங் களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்ட பத்தில் வைத்து மேற்கொள்ளப்படும் திருத்தக் கோரிக் கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு: மேலே 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரர்களால் பின்னர் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் எவையும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்ப தாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

13. விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில், குறிப்பிட்ட பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சையின் முதல் நாளன்று தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். முறைப்படி தனது அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் எவருக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

14. அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும். பரீட்சை மண்டப பொறுப் பதிகாரி திருப்தியடைக் கூடிய வகையில் பரீட்சார்த்து பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும் :

    i. தேசிய ஆளடையாள அட்டை ;
    ii. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு அல்லது ;
    iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்துடன் பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப் படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடா மலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளக் கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். இதற்கு இணங்காத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள், மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

15. இப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறை களுக்குப் பரீட்சை விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட்ட வர்களாவர். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்ட னைக்கு அவர் உட்பட நேரிடும்.

16. பரீட்சைப் பெறுபேறுகள்

    i. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்ப தாரர்களினதும் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேறு ஆவணங்களைப் பரீட்சை ஆணையாளர் நாயகம், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்குவார்.

    ii. பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

17. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடோ அல்லது பொருத்தமின்மையோ காணப்படின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாகச் செயற்படப்படும்.

18. இந்த அறிவித்தலின் மூலம் உள்ளடங்கப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்துத் தீர்மானிக்கும் உரிமை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரித்தானது.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி
அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2026, ஓகத்து மாதம் 11.

08-273

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.